Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, FEBRUARY 17, 2023

வெள்ளிக்கிழமை பெப்ரவரி 17, 2023 | ஒளி: 08 கதிர்: 211 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | Free

நேற்று முதல் நாடளாவிய ரீதியில்

# மின்வெட்டு அமலாகாது

**அமைச்சர் காஞ்சன அறிவிப்பு**

**செலவை ஈடுகட்டவே கட்டண உயர்வு**

**பல மாத பேச்சுக்குப் பின்னரே கட்டண அதிகரிப்பு**



தொடர்ச்சியான மின்சார உற்பத்திக்கான செலவை ஈடுகட்டும் வகையில் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் நேற்று (16) முதல் மின்வெட்டு அமல்படுத்தப்பட மாட்டாது என்றும் மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மின்கட்டண அதிகரிப்பு தொடர்பில் விளக்கமளித்து மின்சக்தி அமைச்சில் நேற்று (16) ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அமைச்சர் மேற்குறிப்பிட்ட விடயத்தைக் குறிப்பிட்டார்.

நேற்று முதல் அமலாகும் வகையில் 66 சதவீதமாக மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பெரும்பான்மையான அங்கத்தவர்களின் அனுமதியின் கீழ் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களுக்கு பின்னரே, மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் நேற்று முதல் நாடளாவிய ரீதியாக தொடர்ச்சியாக மின்சாரத்தை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நிலக்கரி கொள்வனவு செய்வதற்காக இலங்கை வங்கி 22 பில்லியன் ரூபாயையும் மக்கள் வங்கி 50 பில்லியன் ரூபாயையும் வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## நான்கு பொருட்களின் விலைகள் குறைப்பு



உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், இறக்குமதி செய்யப்படும் சம்பா அரிசி, சிவப்பு பருப்பு ஆகிய 04 அத்தியாவசிய பொருட்களின் விலைகளை வியாழக்கிழமை (16) முதல் அமலுக்கு வரும் வகையில் குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக லங்கா சதொச அறிவித்தது.

அனைத்து சதொச விற்பனை நிலையங்களிலும் இந்த விலை குறைப்பு நேற்று முதல் அமலுக்கு வருகிறது என்றும் நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லங்கா சதொச அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளது.

ஒரு கிலோ கிராம் உருளைக்கிழங்கு 375 ரூபாய்க்கும், ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயம் 149 ரூபாய்க்கும், இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் சம்பா அரிசி 198 ரூபாய்க்கும், ஒரு கிலோ கிராம் சிவப்பு பருப்பு 358 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படவுள்ளது.




## சப்ரகமுவ பல்கலைக்கழகத்துக்கு காலவரையறை இன்றி பூட்டு

சப்ரகமுவ பல்கலைக்கழக முதலாம் ஆண்டு மாணவர்கள் தவிர்ந்த ஏனைய மாணவர்களுக்காக காலவரையறையின்றி மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் உதய ரத்நாயக்க தெரிவித்தார்.

அனைத்து மாணவர்களும் வியாழக்கிழமை (16) மாலை 4 மணிக்கு முன்னர் விடுதி அறைகளை விட்டு வெளியேற வேண்டும் என்றும் 4 மணிக்குப் பின்னர் மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்துக்குள் பிரவேசிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

சப்ரகமுவ பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தின் முதலாம் ஆண்டு மாணவர்கள் மற்றும் விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்கள் இடையே புதன்கிழமை இரவு (15) மோதல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த 09 மாணவர்கள் பலாங்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேற்குறிப்பிட்ட அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இரசாயனங்களை பாவித்தால்

## மண் முற்றாக அழிந்துவிடும்

■ ஹஸ்பர்



தொடர்ந்தும் இரசாயனங்களை விவசாயத்திற்கு பயன்படுத்தினால் 2050 ஆம் ஆண்டளவில் எமது மண் முற்றாக அழிந்துவிடும் என்றும் அவ்வாறு நடந்தால் மண்ணை மீட்க முடியாது எனவும் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் தெரிவித்தார்.

திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் ஜப்பானிய அரச சார்பற்ற நிறுவனமான 'பீஸ் வைன்' நடத்திய உள்ளூர் சந்தைக்கு சேதன பசளை உற்பத்திகளை அறிமுகப்படுத்தும் கண்காட்சியை வியாழக்கிழமை (16) திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேகியும் கலந்துகொண்டதுடன், இயற்கை வேளாண்மையில் சிறந்த முறையில் விளைச்சலை மேற்கொண்ட விவசாயிகளுக்கு விருது மற்றும் சான்றிதழ் வழங்கும் விழாவும் நடந்தது.

மேலும் கருத்து தெரிவித்த ஆளுநர்,

தொடர்ச்சி P2




புற்றுநோய் மருந்தை

## திருடி விற்பனை செய்த ஊழியருக்கு விளக்கமறியல்

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட மருந்தை விற்பனை செய்த குற்றச்சாட்டில், வைத்தியசாலை ஊழியரை எதிர்வரும் பெப்ரவரி 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ், வியாழக்கிழமை (16) உத்தரவிட்டார்.

புற்று நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக பயன்படுத்தப்படும் கார்போபேட்டின் என்ற மருந்துதை புற்றுநோயாளிகளுக்கு 21 ஆயிரம் ரூபாய்கு விற்பனை செய்யப்படுவதாக எழுந்த முறைப்பாட்டின் பேரில் சந்தேகநபர் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின்

## தவிசாளர் ஜனகவின் அலுவலகத்துக்கு சீல்



கொழும்பு, கோட்டை நீதவானின் உத்தரவுக்கு அமைய இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஜனக ரத்நாயக்கவின் அலுவலகத்துக்கு கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் வியாழக்கிழமை (16) சீல் வைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆணைக்குழுவின் தவிசாளர் தற்போது வெளிநாட்டில் இருப்பதாகவும், அவரின் அலுவலகத்தில் உள்ள முக்கிய ஆவணங்களை

தொடர்ச்சி P2

மின்கட்டண உயர்வின் எதிரொலி

## சோற்றுப் பொதி, கொத்து விலை 10% ஆல் அதிகரிப்பு

**தொழிற்சாலை உற்பத்திகளும் 20% உயர்வு**



மின்கட்டண அதிகரிப்பு காரணமாக, சோற்றுப் பொதி, கொத்து, பிரைட் ரைஸ் ஆகியவற்றின் விலைகளை வியாழன் (16) நள்ளிரவு முதல் 10%ஆல் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை சங்கத்தின் தலைவர் அசேல சம்பத், வியாழக்கிழமை (16) தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர், எவ்வாறாயினும் அப்பம் உள்ளிட்ட ஏனைய கோதுமை உணவு பொருட்களின் விலை அதிகரிக்கப்படாது என்றார்.

சமையல் எரிவாயு விலை அண்மையில் உயர்த்தப்பட்டமை மற்றும் கடந்த முறை மின்கட்டண

தொடர்ச்சி P2

## சீனாவுக்கு பறந்தார் கோட்டாபய

■ டி.கே.ஜி கபில



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவரது மனைவி அயோமா ராஜபக்ஷவும் வியாழக்கிழமை (16) அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக சீனாவுக்கு பயணமாகியுள்ளனர் என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சீனா செல்வதற்காக நேற்று அதிகாலை 12.25 மணிக்கு மலேசியன் எயார்லைன்ஸின் எம்எச்-178 விமானத்தில் மலேசியாவின் கோலாலம்பூர் நோக்கி பயணித்துள்ளனர் என்றும் அந்த தகவல்கள் தெரிவித்தன.

தொடர்ச்சி P2

## 'ரணில் கோ கம' விரைவில் வரும்

**சாணக்கியன் எம்.பி தெரிவிப்பு**

■ வா.கிருஸ்ணா



"மக்களின் ஜனநாயக உரிமையை ஜனாதிபதி பறிக்க நினைப்பார். கோட்டபாய ராஜபக்ஷ முகம் கொடுத்த 'கோட்டா ஹோகம'வை பார்க்கிலும் பத்து மடங்கு அதிகமான எதிர்ப்பை 'ரணில் ஹோகம' என்ற பெயரிலே வரலாம்" என்று மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.

தொடர்ச்சி P2

## கப்ராலுக்கு எதிரான வழக்கில் ஏப்.6 உத்தரவு



இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாடு தொடர்பான உத்தரவை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி பிறப்பிப்பதற்கு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம், வியாழக்கிழமை (16) தீர்மானித்தது.

கப்ராலுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணத்தடையை எதிர்வரும் ஏப்ரல் 6 ஆம் திகதி வரை நீட்டித்து கொழும்பு மேலதிக நீதவான் டி.என்.ஏ இளங்கசிங்க உத்தரவிட்டார்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரின் தீர்மானங்களால் நாட்டில் தற்போதைய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறி, கீர்த்தி தென்னகோன் அவருக்கு எதிராக தனிப்பட்ட முறைப்பாடு செய்திருந்தார்.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 136(1)(அ) பிரிவின் கீழ், தென் மாகாண முன்னாள் ஆளுநர் ரஜித் கீர்த்தி தென்னகோனால் தாக்கல் செய்த தனிப்பட்ட முறைப்பாட்டில் 500 மில்லியன் அமெரிக்க டொலர் இறையாண்மை பத்திரத்தை செலுத்த நடவடிக்கை எடுத்ததில் இருந்து நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு கப்ரால் தான் காரணம் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

2005 ஆம் ஆண்டு முதல் 2015 வரை மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் நிவார்ட் கப்ரால் செயற்பட்ட காலப்பகுதியில் இலங்கை அரசாங்கத்துக்கு,

தொடர்ச்சி P2

## முஜிபுரின் மனுவை பரிசீலிக்க தீர்மானம்



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணம் ஏற்றுக்கொள்வதனை இடைநிறுத்தும் வகையில் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் நீல் ஹப்புஹின்ன வெளியிட்ட சுற்றிக்கையை வலுவற்றதாக்கக் கோரி

தொடர்ச்சி P2

இலங்கையும் இந்தியாவும்

## மின்சக்தி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட தீர்மானம்

இலங்கையும் இந்தியாவும் தங்களது மின் கட்டமைப்புகளை இணைக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அடுத்த இரண்டு மாதங்களில் கைச்சாத்திடவுள்ளதாக இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவை மேற்கோள்காட்டி ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## மண் முற்றாக அழிந்துவிடும்

"எங்கள் மண்ணைப் பாதுகாப்பதை ஒருபோதும் தள்ளிப்போடக்கூடாது. இன்று முதல் செய்ய வேண்டும். எமது நாட்டில் 02 ஏக்கர் நெற்செய்கையை மேற்கொள்ளும் பெருமளவிலான விவசாயிகள் உள்ளனர். திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமன்றி மாகாணம் முழுவதிலும் உள்ள இயற்கை விவசாய விவசாயிகள் இவ்வாறான விடயங்களுக்குப் பழகிக் கொள்ள வேண்டும்.

விஷமில்லா உணவுக்காக ஜப்பானில் மிக முக்கியமான திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அத்தகைய பொருட்களுக்கு நல்ல தேவை உள்ளது. எனவே, இதுபோன்ற நடவடிக்கைகளுக்கு ஆணையை வழங்கியதற்காக ஜப்பான் தூதருக்கு நான் குறிப்பாக நன்றி கூறுகிறேன்" என்று ஆளுநர் கூறினார்.

விழாவின் பின்னர், ஜப்பானிய தூதுவருக்கும் ஆளுநருக்கும் இடையிலான விசேட சந்திப்பு திருகோணமலையில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. கிழக்கு மாகாணத்தின் விவசாயம், தொல்லியல் மற்றும் சுற்றுலாத் துறைகளுக்கு ஜப்பானிலிருந்து புதிய முதலீட்டாளர்களை அழைப்பதற்கான வாய்ப்பை வழங்குமாறு ஆளுநர் கோரினார்.

இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள கனிய மணல் கூட்டுத்தாபனத்தில் முதலீடு செய்ய ஜப்பானிய அரசாங்கத்தை ஊக்குவிக்குமாறும் ஆளுநர் தூதுவரிடம் வலியுறுத்தினார்.

## திருடி விற்பனை செய்த ஊழியருக்கு விளக்கமறியல்

புற்றுநோய் வைத்தியசாலையில் அந்த மருந்து இல்லாததால் இந்தச் சந்தேக நபரிடம் இருந்து குறித்த மருந்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று வைத்தியசாலையில் உள்ள ஒருவர் தெரிவித்ததாக இந்தச் சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்த முறைப்பாட்டாளர் தெரிவித்ததாக ஆணைக்குழு மன்றுக்கு அறிவித்தது.

மஹரகம பிரதேசத்தில் சந்தேக நபரிடம் இருந்து குறித்த முறைப்பாட்டாளர் போதைப்பொருளை பெற்றுக்கொண்ட போது ஆணைக்குழு அதிகாரிகள் சுற்றிவளைத்து சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர்.

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு நன்கொடையாளர்களால் வழங்கப்பட்ட மருந்துத் தொகுதியை சந்தேகநபர் திருடிச் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளதுடன், அந்த மருந்தையே அதிக விலைக்கு விற்பனை செய்து வந்துள்ளார்.

## தவிசாளர் ஜனகவின் அலுவலகத்துக்கு சீல்

அழிக்க சிலர் திட்டமிட்டுள்ளதாக கொள்ளுப்பிட்டி பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

அதற்கமைய அலுவலகத்துக்கு சீல் வைக்க உத்தரவிடுமாறு கோரி கொள்ளுப்பிட்டி பொலிஸார் கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்வைத்த கோரிக்கையை பரிசீலித்த நீதவான், சீல் வைப்பதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

அதற்கமைய, கொழும்பு 03இல் அமைந்துள்ள தவிசாளரின் அலுவலகத்துக்கு சீல் வைக்குமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டதாகவும் தவிசாளர் இலங்கை திரும்பிய பின்னர் அலுவலகம் மீண்டும் திறக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## சோற்றுப் பொதி, கொத்து விலை 10% ஆல் அதிகரிப்பு

உயர்வு ஆகியவற்றின் போது, விலைகளை அதிகரிக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கம் மக்களின் நிலை தொடர்பில் எவ்வித கவலையும் கொள்ளாத நிலையில், ஏனையோரின் சட்டைப் பைகளை நிரப்பிக் கொண்டு, எம்மால் நட்டமடைய முடியாது என்றும் தம்மால் குறித்த முடிவையே எடுக்க நேரிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு புதிதாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள், ஆணைக்குழுவின் தவிசாளரை தனிமைப்படுத்திவிட்டு, மின்சார கட்டணத்தை 66 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக கூறினார். மின்சார சபையின் நடவடிக்கை குறித்து பிரச்சினைகள் காணப்படுவதாகவும் மின்சார சபையின் நட்டத்தை ஈடுசெய்ய இவ்வாறு மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, மின்கட்டண அதிகரிப்பு காரணமாக அனைத்து தொழிற்சாலை உற்பத்திகளின் விலைகளையும் 20 சதவீதத்தால் அதிகரிக்கவுள்ளதாக அகில இலங்கை சிறு கைத்தொழில் சங்கம் அறிவித்துள்ளது.

## சீனாவுக்கு பறந்தார் கோட்டாபய

எனினும், அவர்கள் இருவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தை விட்டு வெளியேறுவதற்காக விமான நிலையத்தின் விமான சரக்கு முனையத்தை பயன்படுத்தியுள்ளதாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னாள் ஜனாதிபதியொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள சிறப்பு விருந்தினர் பகுதி ஊடாகப்பயணம் செலுத்தி அல்லது சாதாரண பயணிகள் முனையத்தின் ஊடாகவோ செல்வதற்கு வசதிகள் காணப்படுகிறது.

இந்த நிலையில், முன்னாள் ஜனாதிபதியும் அவரது மனைவியும் சரக்கு முனையத்தை பயன்படுத்தி சென்றுள்ளதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கப்ராலுக்கு எதிரான வழக்கில் ஏப்.6 உத்தரவு

10.4 முதல் 10.6 பில்லியன் ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக முறைப்பாட்டாளர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றவியல் நம்பிக்கை மீறலுக்காக தண்டனைச் சட்டத்தின் 388ஆவது பிரிவின் கீழ் கப்ரால் தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்ததாகவும் பதிவுசெய்யப்பட்ட பங்கு மற்றும் பத்திரங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றங்களைச் செய்ததற்கு முன்னாள் ஆளுநரும் பொறுப்பு எனவும் முறைப்பாட்டாளர் குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முஜிபுரின் மனுவை பரிசீலிக்க தீர்மானம்

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாநகர மேயர் வேட்பாளர் முஜிபுர் ரஹ்மான் தாக்கல் செய்த மனுவை எதிர்வரும் 23ஆம் திகதி பரிசீலிப்பதற்கு உயர்நீதிமன்றம், வியாழக்கிழமை (16) தீர்மானித்தது.

பிரியந்த ஜயவர்தன, மூர்து பெர்னாண்டோ, அசல வெங்கப்புலி ஆகிய உயர்நீதிமன்ற நீதியரசர் குழாம் முன்னிலையில் மனு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன்போது, சர்வஜன வாக்குரிமைக்கு இடையூறு ஏற்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட ஒரு முயற்சி என்பதனால் இந்த மனு மீதான விசாரணையை விரைவில் மேற்கொள்வதற்கான திகதியை அறிவிக்குமாறு மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி உப்புல் ஜயசூரிய, மன்றில் கோரினார்.

அமைச்சரவை செயலாளரால் விடுக்கப்பட்ட அறிவிப்புக்கு அமைய வெளியிடப்பட்ட குறித்த சுற்றறிக்கை பொது நிர்வாக அமைச்சின் செயலாளரால் ஒரு சில மணித்தியாலங்களில் வாபஸ் பெறப்பட்டதாக சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், ஜனாதிபதி சட்டத்தரணி நெரில் புள்ளே நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

அமைச்சரவையின் தீர்மானத்துக்கு அமைய உள்ளூராட்சி தேர்தல் வேட்பாளர்களிடம் இருந்து கட்டுப்பணத்தை ஏற்க வேண்டாம் என்று மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு 2023 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் திகதி கடிதம் மூலம் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் அறிவித்திருந்தமையை சவாலுக்கு உட்படுத்தி குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

அரசியலமைப்பின் 12(1) மற்றும் 14(1)(அ) பிரிவுகளின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள தனது அடிப்படை உரிமைகள், உள்ளூராட்சி தேர்தல் வேட்பாளர்களிடம் இருந்து வைப்புத்தொகையை ஏற்க்க கூடாது என்ற அமைச்சரவைத் தீர்மானத்தால் மீறப்பட்டுள்ளதாக மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மின்சக்தி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட தீர்மானம்

இலங்கையும் இந்தியாவும் வர்த்தக உடன்படிக்கையை விரிவுபடுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளை எதிர்வரும் இரண்டு மாதங்களில் ஆரம்பிக்கவுள்ளதாக ரொய்ட்டர்ஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் பொருளாதார மீட்சித் திட்டத்தின் முக்கிய பகுதியானது, நாட்டின் வடக்கில் அதன் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களை அபிவிருத்தி செய்வதில் தங்கியுள்ளது என்று தெரிவித்த மொரகொட, அங்கிருந்து எல்லை தாண்டிய கேபிள் மூலம் மின்சாரத்தை தென்னிந்தியாவுக்கு கொண்டு செல்ல முடியும் என்றார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் மின்சார பரிமாற்றத்தை ஆரம்பிக்கும் திட்டத்திற்கான முன்மொழிவு சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் முன்வைக்கப்பட்டது. கடந்த வருடம் இலங்கையும் இந்தியாவும் அது பற்றிய விவாதங்களை மீண்டும் ஆரம்பித்தன.

இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்குள் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஆற்றல் பரிமாற்ற இணைப்பை ஏற்படுத்த முடிந்தால், இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை இந்தியாவுக்கு விற்பனை செய்ய முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## 'ரணில் கோ கம' விரைவில் வரும்

சாணக்கியன் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசு கட்சியின் தேற்றாத்தீவு மற்றும் மாங்காடு வட்டாரங்களுக்கான கிளைக் காரியாலயம் திறந்து வைக்கும் நிகழ்வு தேற்றாத்தீவு பகுதியில் இடம்பெற்ற போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், "கடந்த தேர்தலில் மொட்டு, படகு போன்ற சின்னங்களுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு வழங்கப்பட்ட வாக்குகளை விட அதிகமான வாக்குகள் கிடைக்கப்பெற்றது.

பாராளுமன்றத்திற்கு சென்று நாங்கள் அங்கு பிரச்சினைகளை கதைப்போம். அப்போது அங்கு இருப்பவர்கள் 'கொட்டியா' என எங்களை பேசுவார்கள். அவர்கள் அவ்வாறு சொல்லும் பொழுது, நாங்கள் அவர்களுக்கு 'நாய்' என கூறுவோம். இவ்வாறு மாறி மாறி நாங்கள் சண்டை பிடிக்கின்றோம்.

அண்மையில் நாங்கள் கருப்பு சுதந்திர தினம் ஒரு நிகழ்வினை கல்லடி பாலத்தின் அருகில் செய்து இருந்தோம். இதனை செய்துவிட்டு அடுத்த பாராளுமன்ற அமர்வுக்கு நாங்கள் செல்கின்ற போது, அங்கு ஓர் அமைச்சர் சிரித்து விட்டு "நல்ல ஒரு ஷோ காட்டி விட்டு வந்திருக்கின்றீர்கள்" என கூறுகின்றார்.

நாங்கள் இம்முறை தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் படகு, கப்பலில் போட்டியிடுகின்றோம் என்று மொட்டு கட்சியினுடைய தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ சொல்லி இருக்கின்றார் .

எங்களுடைய மக்களை படகையும் மொட்டையும் இங்கு இறக்கி ஏமாற்றுகின்றார்கள். இதனை எவ்வாறு துணிச்சலாக கூறுகின்றார்; அவ்வாறாயின் மட்டக்களப்பில் இருப்பவர்கள் மடையர் என எண்ணுகின்றாரா? எங்களுடைய தேர்தலுக்கான வாக்கிடும் சீட்டு அச்சிடுவதற்கான பணம் ஒதுக்கப்படவில்லை.

இவ்வாறான ஒரு நேரத்தில் இது ஒரு புது செய்தியை ஜனாதிபதி கூறி இருக்கின்றார் அல்லது அரசாங்கம் கூறியிருக்கின்றது.

தேர்தலை பின் போடுவதற்கான மிகக் கீழ்த்தரமான எல்லா சதிகளையும் செய்து பார்த்தார்கள். நீதிமன்றத்திற்கும் சென்றார்கள். இவை அனைத்திலும் தேர்தலை நடத்துங்கள்; மக்களுடைய ஜனநாயக உரிமைக்கு மதிப்பளியுங்கள் என ஜனாதிபதிக்கு கூறிய போதும், இறுதி முயற்சியாக நிதி இல்லை. அதனால் அச்சிட முடியாது எனக் கூறி தபால் மூல வாக்கெடுப்பு தற்காலிகமாக பிற்படுபோடப்பட்டதாக செய்தி வந்துள்ளது.

காலை மறுபடியும் தேர்தல் நடக்கும் என்ற செய்தி வந்திருக்கின்றது. நாட்டினுடைய ஜனாதிபதி ஒரு முன்னுதாரணமாக இருக்க வேண்டும். ஒரு நாட்டினுடைய தலைவர் எவ்வாறு செயற்பட வேண்டும் என ஓர் உரையிலேயே கூறி இருக்கின்றார். இதுவா உங்களுடைய தலைமைத்துவ பண்புகள்.

மக்கள் தொடர்ந்து வீட்டில் இருக்க மாட்டார்கள். தங்களுடைய ஜனநாயக சுதந்திரம் மறுக்கப்பட்டால் வீதிக்கு வருவார்கள். நாங்கள் வரவழைக்க வேண்டிய தேவையில்லை. மீண்டும் நாடு ஒரு குழப்ப நிலைக்குள் செல்லும். சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு வார்த்தை இல்லாமல் போகும். ரணில் ஜாக்கிரதை என்று தான் நான் கூற வேண்டும்." என்று தெரிவித்தார்.

### அநாகரிகமான சொற்பிரயோகம்:

## யாழ். மாநகர சபையிலிருந்து உறுப்பினர் வெளியேற்றப்பட்டார்

■ நிதர்சன் வினோத்

சபையில் அநாகரிகமான சொற்பிரயோகத்தை செய்த மாநகர சபை உறுப்பினர் வெளியேற்றப்பட்டார்.

யாழ்ப்பாண மாநகர சபையின் அமர்வு நேற்று (16) காலை மாநகர மேயர் இம்மானுவேல் ஆனல்ட் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மாநகர சபை உறுப்பினர் பாலகப்பிரமணியம் பத்மமுரளி, 'வைக்கோல் பட்டறை நாய்' போன்று சிலர் செயல்படுவதாக கூறியிருந்தார்.

இதனால் சபையில் அமளிது துமளி ஏற்பட்டது. அதாவது, குறித்த உறுப்பினர், சபை அமர்வில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும் என உறுப்பினர்கள் மேயரிடம் கேட்டுக்கொண்டனர்.

"நீங்கள் என்னை வெளியேற்ற வேண்டாம்; நானே வெளியேறிச் செல்லுகிறேன்" என உறுப்பினர் பாலசுப்பிரமணியம் பத்மமுரளி தெரிவித்துவிட்டு வெளியேறினார்.

குறித்த உறுப்பினருடைய அநாகரிகமான சொற்பிரயோகம் பதிவு செய்யப்படும் எனவும், சபையினுடைய வேண்டுகோளுக்கு அமைவாக அவர் சபையிலிருந்து வெளியேற்றப்பட்டார் என்ற பதிவு குறிப்பிடப்படும் என மேயர் தெரிவித்தார்.

அத்தோடு, குறித்த உறுப்பினருக்கு இந்த மாதத்துக்கான கொடுப்பனவும் ரத்து செய்யப்படுகிறது எனவும் இந்த ஒரு மாதத்தில் சபையினுடைய செயற்பாடுகளுக்கு அவர் அனுமதிக்கப்பட மாட்டார் எனவும் சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## பஸ் விபத்து; நால்வர் காயம்



■ அந்துலன்

இ.போ.ச பஸ்ஸொன்றும், தனியார் பஸ்ஸொன்றும் நேற்று (16) பிற்பகல் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் நால்வர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக கினிகத்தேன பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பில் இ.போ.ச பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று கினிகத்தேன பொலிஸார் தெரிவித்தனர்.

கினிகத்தேன, பெரகஹமுல பகுதியில் வைத்தே பிற்பகல் இரண்டு மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. கண்டியிலிருந்து ஹட்டன் நோக்கி பயணித்த இ.போ.ச பஸ், பயணிகள் இறங்குவதற்காக பெரகஹமுல பகுதியில் நிறுத்தப்பட்டுள்ளது.

அவ்வேளையில், கொழும்பிலிருந்து ஹட்டன் நோக்கி பயணித்த மற்றுமொரு இ.போ.ச பஸ், நிறுத்திவைக்கப்பட்டிருந்த பஸ்ஸை, முந்திக்கொண்டு செல்ல முற்பட்டுள்ளது. இதன்போதே எதிர்த்திசையில் ஹட்டனில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸில் மோதுண்டுள்ளது.





## வாழ்க்கையில்

# உன்னத நிலையை அடைய உதவும் மகாசிவராத்திரி

‘விபுலமாமணி’ வி.ரி சகாதேவராஜா

**சைவ சமயத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமான். அவரது அனுக்கிரகத்தைப் பெற பல விரதங்கள் அனுஷ்டிக்கப் படுகின்றன. அவற்றில் முதன்மையானது, மகாசிவராத்திரி விரதம் ஆகும். இதைப் ‘பெருஞ்சிவனிரவு’ என்றும் தற்போது கூறுகின்றனர்.**

மகாசிவராத்திரியன்று விரதம் இருந்தால், மூன்று பிறவியில் செய்த பாவங்கள் முழுவதுமாக நீங்கும் என்பது ஐதீகம். மனக் கவலைகள், உடல் மற்றும் மன ரீதியான நோய்கள், வறுமை நிலை ஆகியவை நீங்கி, வாழ்வில் எல்லா நிலைகளிலும் மேன்மை பெறுவதற்கு, மகாசிவராத்திரி விரதம் இருந்தாலே போதும் என்று நமது மூதாதையர் நம்பிக்கையுடன் விரதம் அனுஸ்டித்து வந்தனர்.

சிவனுக்கு ஓர் இராத்திரி சிவராத்திரி
சக்திக்கு ஒன்பது இராத்திரி நவராத்திரி
மாசி மாதம் வரும் மகாசிவராத்திரி

மகாசிவராத்திரி நாளில், விரதம் இருந்தால் இருமடங்கு நன்மை உண்டாகும் என்ற நம்பிக்கை நம்மவர்கள் மத்தியில் ஆழமாக உண்டு. ஒவ்வொரு மாதமும் அமாவாசைக்கு முந்தின நாள், சிவராத்திரி என சிவன் கோவில்களில் சிறப்பு ஆராதனை நடைபெறும். மாசி மாதம் அமாவாசைக்கு முதல்நாள், மகாசிவராத்திரி என வருடம் தோறும் மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. மாசி மாதம் வரும் மகாசிவாராத்திரிக்கு தனிச் சிறப்பு உண்டு. இந்த ஆண்டுக்கான மகாசிவராத்திரி நாளை (18) சனிக்கிழமை வருகிறது.

எந்த ஆண்டும் இல்லாத ஒரு விசேடமாக, மகாசிவராத்திரி அன்றே சனி பிரதோஷமும் நடைபெறுகிறது. எனவே, இந்த ஆண்டு மகாசிவராத்திரி மிக மிக சக்தி வாய்ந்ததுடன் சிறப்பானதாகவும் கருதப்படுகிறது.

பொதுவாக, நான்கு சாமப் பூஜைகள் கோவில்களில் நடைபெறுவதுண்டு. முன்னிரவு 8.30, இரவு 10.30, நள்ளிரவு 12.30, பின்னிரவு 2.30 ஆகிய நான்கு சாமங்களில் சிவராத்திரி பூஜை வழிபாடு இடம்பெறும்.

சனிக்கிழமை (18) பகலில் திரயோதசி திதியும், இரவில் சதுர்த்தசி திதியும் சேர்ந்து ஒரே நாளில் வருவதால், இந்த மகாசிவராத்திரி விசேடமானதாக அமைந்துள்ளது. இந்த நாளில், பக்தர்கள் விரதமிருக்க இரு மடங்கு பலன் கிடைக்கும் என்பது ஐதீகம்.

ஆனால், எல்லாராலும் மகாசிவராத்திரியன்று முழுமையாக விரதம் இருக்க முடியாது. “அவன் அருளாலே அவன் தாள் வணங்கி...” என்பது போல, சிவபெருமானின் ஆசி இருந்தால் மட்டுமே, மகாசிவராத்திரியன்று விரதம் இருக்க முடியும் என கூறுவார்கள்.

சிவராத்திரிக்கும் மற்ற விழாக்க ளுக்கும் வித்தியாசங்கள் உண்டு. இறைவனின் அவதாரங்களை மையப்படுத்தி கிருஷ்ண ஜயந்தி, இராமநவமி, அனுமன் ஜயந்தி, விநாயகர் சதுர்த்தி, சங்கரர் ஜயந்தி என விழாக்கள் உள்ளன. ஆனால், சிவபெருமான் பிறப்புக்கும், இறப்புக்கும் அப்பாற் பட்டவர் என்பதால், அவருக்கு ஜயந்தி என்பது கிடையாது. மாசி மாதம், தேய்பிறை சதுர்த்தசிதான் (24ஆம் நாள்) மகாசிவராத்திரி.

**மனக் கவலைகள், உடல் மற்றும் மன ரீதியான நோய்கள், வறுமை நிலை ஆகியவை நீங்கி, வாழ்வில் எல்லா நிலைகளிலும் மேன்மை பெறுவதற்கு, மகாசிவராத்திரி விரதம் இருந்தாலே போதும்!**

**ஒவ்வொரு மாதமும் அமாவாசைக்கு முந்தின நாள், சிவராத்திரி என சிவன் கோவில்களில் சிறப்பு ஆராதனை நடைபெறும். மாசி மாதம் அமாவாசைக்கு முதல்நாள், மகாசிவராத்திரி என வருடம் தோறும் மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது**

**எந்த ஆண்டும் இல்லாத ஒரு விசேடமாக, மகாசிவராத்திரி அன்றே சனி பிரதோஷமும் நடைபெறுகிறது. எனவே, இந்த ஆண்டு மகாசிவராத்திரி மிக மிக சக்தி வாய்ந்ததுடன் சிறப்பானதாகவும் கருதப்படுகிறது**

அனைத்துக்கும் ஆதாரமான சிவன், உயிர்களைப் படைத்ததும், ஒடுக்கியதும் (தனக்குள் ஐக்கியப் படுத்தியது) இந்த நாளில்தான். ‘லயக்ரம ஸ்ருஷ்டி தினம்’ என்கின்றன சாஸ்திரங்கள். ‘லயம்’ என்றால் ‘ஒடுக்குதல்’, ‘ஸ்ருஷ்டி’ என்றால் ‘படைத்தல்’. அதாவது, படைத்தலுக்கும், அழித்தலுக்கும் ஆதாரமான இறைவனுக்கான விழா இது.

பண்டைய கால புராணங்கள், இதிகாசங்களில் மகாசிவராத்திரி பற்றி பல கதைகள் குறிப்பிடப்பட்டு இருக்கின்றன.

பார்வதிதேவி நீண்ட காலம் கடும் தவமிருந்து, ஈசனை அடைந்த தினம் தான் மகா சிவராத்திரி தினம் என விரதம் இருந்து அனுஸ்டிக்கப்படுகின்றது.

உலகம் முழுவதும் கடலில் மூழ்கி, உலகில் உயிரினங்களே இல்லாது போகும் ஒரு நிலை ஏற்பட்ட நேரத்தில், பார்வதிதேவி உலகத்தில் இருக்கும் உயிர்களை காக்க வேண்டுமென்று, தீவிரமாகத் தவம் இருந்து, சிவபெருமானை பூஜித்தார். அவர் பூஜை செய்த அந்த இரவுதான், மகாசிவராத்திரி நாள் என்பது ஐதீகம்.

அதேபோல, பார்வதிதேவி சிவபெருமானின் இடது பக்கத்தில் தனக்கு பாகம் பெற்ற நாளும் மகாசிவராத்திரி தான் என்று கூறப்படுகிறது.

மகாபாரத காலத்தில், பாண்டவர்களில் ஒருவரான அர்ஜுனன், தீவிரமான தவம் செய்து சிவபெருமானிடம் இருந்து ‘பாசுபதம்’ என்ற அஸ்திரத்தை வரமாகப் பெற்ற நாளும் சிவராத்திரியாகும்.

அதேபோல, மார்க்கண்டேயன் என்றென்றும் இளமையாக, இறப்பே இல்லாமல் இருப்பதற்கு எமனை சம்ஹாரம் செய்த நாளும் சிவராத்திரி தான்.

கண்ணப்ப நாயனார் கதை பற்றி அனைவருக்கும் தெரிந்திருக்கும். அவர் குருதி வழிய, தன்னுடைய கண்களை எடுத்து ஈசனுக்கு பொருத்திய அந்த நாளும் சிவராத்திரிதான்.

அதுமட்டுமில்லாமல், மும்மூர்த்திகளில் இருவராகிய விஷ்னு, பிரம்மா ஆகியோருக்கு இடையில் யார் பெரியவர் என்ற சண்டை ஏற்பட்ட போது, இலிங்க வடிவமாகத் திகழும் சிவபெருமான், இவர்களுக்கும் மகாவிஸ்வரூபமாகக் காட்சியளித்ததும் மகாசிவராத்திரி அன்றுதான்.

மேலும், பிரம்மா, விஷ்னு ஆகியோரைவிட, சிவபெருமான் சக்தி வாய்ந்தவர் என்பதை நிரூபிக்கும் வகையில், ஜோதிர் லிங்கமாக சிவபெருமான் உருவெடுத்ததும் சிவராத்திரி நாளில் தான் என்று கூறப்படுகிறது.

சனிப் பிரதோஷம், மகாசிவராத்திரி இரண்டும் அரிதாக ஒன்றிணையும் இந்த நாளில் விரதம் இருந்து, சிவபெருமானை வழிபட்டு வந்தால் நாட்பட்ட நோய்களும் தீரும்; தோஷங்கள் நிவர்த்தியாகும்; கடன் தொல்லை நீங்கும்; வாழ்க்கையில் உன்னதமான நிலையை அடைய முடியும் என கூறப்படுகிறது. அத்துணை சிறப்புப் பெற்ற மகாசிவராத்திரியை நாமும் முறைப்படி கடைப்பிடித்து வாழ்வில் உய்வோமாக!



# மின்கட்டணத் திருத்தத்தால் சிரமப்படுவோருக்கு நிவாரணம்

## அமைச்சருக்கும் அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி பணிப்புரை



பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் அங்கிகரிக்கப்பட்ட மின்கட்டணத் திருத்தத்தை அமல்படுத்துவதால் சிரமங்களை எதிர்நோக்கும் தரப்பினருக்கு நிவாரணம் வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சருக்கும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கும் நேற்று (16) பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி, மின் பாவனையாளர்களுக்கு தொடர்ச்சியாக மின்சாரம் வழங்குவதுடன், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல், மத ஸ்தலங்கள், அரச கல்வி நிறுவனங்களுக்கு சூரிய மின் தகடுகளை (solar panels) வழங்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.



## புத்தளம் தள வைத்தியசாலைக்கு

# மருந்து பொருட்கள் கையளிப்பு

எம்.யூ.எம் சனூன்

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், ஒரு தொகை மருந்து பொருட்களை, புத்தளம் தள வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி டொக்டர் சுமித்திடம் நேற்று (16) கையளித்துள்ளார்.

புத்தளம் தள வைத்தியசாலையில் நிலவும் மருந்து பற்றாக்குறை சம்பந்தமாகவும், இதனால் மக்கள் அனுபவிக்கும் அசௌகரியங்கள் தொடர்பாகவும் பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் கவனத்துக்கு, புத்தளம் தள வைத்தியசாலையின் அதிகாரி டொக்டர் சுமித், விசேட வைத்திய நிபுணர் டொக்டர் இளஞ்செழியன் ஆகியோர் கொண்டு வந்திருந்தனர். இவ்வேண்டுகோளை ஏற்றுக்கொண்டே பாராளுமன்ற உறுப்பினர் இந்த மருந்து பொருட்களை வழங்கியுள்ளார்.

# மாவனெல்ல பிரதேச சபை தவிசாளர் பதவி நீக்கம்

சிவாணி ஸ்ரீ

மாவனெல்ல பிரதேச சபை தவிசாளர் ரங்கோத் ஜேடிகே நோயல் தசந்த ஸ்டீவன், அந்த பதவியில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார். சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவால் 2023 பெப்ரவரி 14ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அந்த பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டுள்ளார்.

1989 இலக்கம் 12 ஐ கொண்ட மாகாண சபை சட்டத்தின் இரண்டாவது பிரிவில் கூறப்பட்டதற்கு அமைய மற்றும் 1987 இலக்கம் 15 ஐ கொண்ட பிரதேச சபை சட்டத்தின் 185(3) (அ) (i) பிரிவின் படி சப்ரகமுவ மாகாண ஆளுநரால் இவ்வாறு செயற்படுத்தப்பட்டுள்ளது.

மாவனெல்ல பிரதேச சபை தவிசாளர் நோயல் தசந்த ஸ்டீவன், இலஞ்ச ஊழல் உட்பட பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.



# விஜயகுமாரதுங்கவின் 35 ஆவது சிரார்த்த தினம்

எம்.இஸட் ஷாஜஹான்

நடிகரும் அரசியல்வாதியுமான காலம்சென்ற விஜயகுமாரதுங்கவின் 35ஆவது சிரார்த்த தினம் நேற்று (16) காலை சீதுவையில் அமைந்துள்ள அவரது சமாதி அருகில் நடைபெற்றது.

முன்னாள் ஜனாதிபதியும் விஜயகுமாரதுங்கவின் பாரியாருமான சந்திரிகா குமாரதுங்க, இந்த நிகழ்வில் கலந்துகொண்டு விஜயகுமாரதுங்கவின் சமாதியில் மலரஞ்சலி செலுத்தினார்.

இந்த நிகழ்வில் கலைஞர்கள், விஜயகுமாரதுங்கவின் ஆதரவாளர்கள், இரசிகர்கள், மதத் தலைவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். விஜயகுமாரதுங்க 1988 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# திறன் விருத்தி செயலமர்வு



AHRC நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் திட்ட முன்மொழிவு தயாரிப்பு தொடர்பான திறன் விருத்தி செயலமர்வு, இரண்டாவது நாளாக நேற்று (16) நிறுவனத்தின் ஆலோசகர் என். மிருனலன் தலைமையில் நடைபெற்றது. திருகோணமலை மல்லிகா விடுதியில் இடம்பெற்றுவரும் குறித்த செயலமர்வில், எட்டு பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். குறித்த செயலமர்வு மூன்றாவது நாளாக இன்றும் (17) நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விவசாயிகளுக்கு வழங்கப்படாதுள்ள

# விவசாய உதவித்தொகையை உடன் வழங்கவும்

எம்.எல்.எஸ் டீன்

அரசாங்கத்தால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகையை, வழங்கப்படாதுள்ள விவசாயிகளுக்கும் உடன் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு விவசாய அமைச்சரிடம், அம்பாரை மாவட்ட விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பெரும் போக விவசாயச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் ஒரு ஹெக்டயருக்கு பத்தாயிரம் ரூபாய் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. நெற்செய்கை மேற்கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் இக் கொடுப்பனவு, வங்கியில் வைப்புச் செய்யப்படவில்லை.

பெரும் போக நெல் அறுவடை தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் வேளையில், சிறுபோகத்துக்கு முன்னர் ஒரு ஹெக்டயருக்கான 10 ஆயிரம் ரூபாய் பணத்தை உடனடியாக வைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு, ஜனாதிபதி மற்றும் விவசாய அமைச்சர் ஆகியோரிடம் அம்பாரை மாவட்ட விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முள்ளிப்பொத்தானை வாசி

# குவைத்தில் விபத்தில் மரணம்

ஒலுமுதீன் கியாஸ் ஷாபி



திருகோணாமலை, முள்ளிப்பொத்தானை, 96ஆம் மைல் கல்லை சேர்ந்த குலாம் நாஹிர், குவைத் நாட்டில் இடம்பெற்ற வாகன விபத்தில் நேற்று முன்தினம் (15) அகால மரணமானார். இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர், பொருளாதார நெருக்கடி காரணமாக, பல இலட்சம் ரூபாயை கடனாகப் பெற்று, இரண்டு மாதங்களுக்கு முன்னர் குவைத் நாட்டுக்கு வேலை தேடிச் சென்றார். இவரின் ஜனாஸா குவைத் நாட்டில் நேற்று (16) நல்லடக்கம் செய்யப்பட்டது.



# ஆரோக்கிய வழிகாட்டல்' விழிப்புணர்வு

அஸ்ஹர் இப்றாஹிம்

சாய்ந்தமருது மஸ்ஜிதுல் ஹிதாயா பள்ளிவாசல் நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில் 'ஆரோக்கிய வழிகாட்டல்' எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு நிகழ்வு அண்மையில் பள்ளிவாசல் கட்டடத் தொகுதியில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மேற்படி நிகழ்வில் வளவாளராக டொக்டர் எம். என்.எம் தில்ஸான் கலந்துகொண்டு சிறப்பித்தார்.



# ஆசிரிய ஆலோசகர்ளுக்கு நியமன கடிதங்கள்

வீ.ரி சகாதேவராஜா

இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவைக்கு தெரிவான சம்மாந்துறை வலய ஆசிரிய ஆலோசகர் கள் ஏழு பேருக்கு நியமனக் கடிதங்கள் நேற்று முன்தினம் (15) வழங்கி வைக்கப்பட்டன.

இவ்வைபவம், கல்விசார் உத்தியோகத்தர்களின் நலன்புரி சங்கத் தலைவரும் உதவி கல்வி பணிப்பாளருமான வீ.ரி சகாதேவராஜா தலைமையில் நடைபெற்றது. சம்மாந்துறை வலய கல்வி பணிப்பாளர் டொக்டர் உமர் மௌலானா நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

அச்சமயம், வலய பிரதிக் கல்வி பணிப்பாளர்களான அப்துல் மஜீத் ஹைதர் அலி, திருமதி நிதர்ஷினி மகேந்திர குமார், உதவி கல்வி பணிப்பாளர்களான றியால், பரமதயாளன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

நியமன கடிதங்களை ஆசிரிய ஆலோசகர்களான எஸ். எல் மன்சூர், கே.எம் நஜாஸ், எம். ஜௌபர், கே. அக்பர், திருமதி ராஜேஸ்வரன், கே. அற்புதராஜா, கே.எம் றிஸ்வி ஆகிய ஏழு பேர் பெற்றுக்கொண்டார்கள்.

# படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்குங்கள்

## சனிக்கிழமை மட்டக்களப்பில் மக்கள் போராட்டம்

க. விஜயரெத்தினம்

ஸ்ரீ லங்காவில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்குங்கள் என மட்டக்களப்பில் மக்கள் போராட்டம் சனிக்கிழமை 18ஆம் திகதி காலை 10.30 மணியளவில், மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நடைபெறவுள்ளது. அனைத்து அரசியல்வாதிகள், சமூக ஆர்வலர்கள், தமிழ் உணர்வாளர்கள், மதத்தலைவர்கள், ஊடகவியலாளர்களும் கலந்து கொள்ளுமாறு கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம், யாழ். ஊடக அமையம், தொழில்சார் இணைய ஊடகவியலாளர் சங்கம், தெற்கு ஊடக அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இப்போராட்டத்தில் பங்கு கொண்டு, படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கிடைப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.



# சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி கடமையேற்பு

நூருல் ஹுதா உமர்

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியாக சாய்ந்தமருதை சேர்ந்த டொக்டர் எம்.ஜே.கே.எம் அர்சத் காரியப்பர் நேற்று (16) தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய டொக்டர் யூ.எல்.எம் நியாஸ் உள்ளிட்ட பொது சுகாதார உத்தியோகத்தர்கள், காரியாலய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

முன்னாள் அமைச்சர் கேட் முதலியார் எம்.எஸ் காரியப்பரின் பேரனான இவர், வைத்திய மற்றும் சுகாதார சேவைக்கு அப்பால், பிரதேசத்தில் 'டார்க் பௌண்டஷன்' எனும் அமைப்பை தோற்றுவித்து, பல்வேறு சமூக சேவைகளை செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

# உலர் உணவுப் பொதிகள்

வீ.ரி சகாதேவராஜா





சமகால பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஆறு கிராமங்களில் வாழும் மக்களுக்கு இரண்டாம் கட்ட உலருணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பால் இந்நிகழ்வு நேற்று முன்தினம்(15) நடத்தப்பட்டது.

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் இணைப்பாளர் திருமதி கலைவாணி தயாபரன் தலைமையில், திட்ட இணைப்பாளர் அனிதா செல்வகுமார், மீளாய்வு கண்காணிப்பு உத்தியோகத்தர் திருமதி கிரிஜா, ஆலையடிவேம்பு கள உத்தியோகத்தர் திருமதி நிஷாகரி ஆகியோர் கலந்து கொண்டு நிவாரணங்களை வழங்கி வைத்தனர்.



# வேட்பாளர்களுக்கான அறிமுகக் கருத்தரங்கு

அ. அச்சுதன்

தேசிய சமாதான பேரவையின் அனுசரணையுடன் சேர்விங் ஹியூமானிட்டி பவுன்டேசன் கிண்ணியா அமைப்பினரின் ஒருங்கிணைப்பில், திருகோணமலை மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான அறிமுகக் கருத்தரங்கு நேற்று முன்தினம் (15) திருகோணமலை ஜூபிலி மண்டபத்தில் நடைபெற்றது.

தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கட்சியில் இருந்தும் தலா 03 வேட்பாளர்களும் மற்றும் திருகோணமலை மாவட்ட சர்வமதக் குழுமத்தின் உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.

மத சகவாழ்வுக்கான முன்னெடுப்பு (ARC) எனும் இச்செயற்திட்டத்தில் சர்வ மத குழுவின் நோக்கு, அதன் இலக்கு, சமூக அங்கிகாரம், உள்ளக ஒற்றுமை, குழுச் செயற்பாடு, பெறுபேறு தொடர்பில் விரிவாக விளக்கமளிக்கப்பட்டதுடன் பங்கு பற்றுனர்களுக்கிடையிலான குழுச் செயற்பாடுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வளவாளராக தேசிய சமாதானப் பேரவையின் சிரேஸ்ட நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் எம்.யூ மதனி உவைஸ், சேர்விங் ஹியூமானிட்டி பவுன்டேசனின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆஷிக் அலாப்தீன் உள்ளிட்ட பலரும் கலந்து சிறப்பித்தார்கள்.

நிலுவையைச் செலுத்தாதுவிடின்

# யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சிக்கு அனுமதியில்லை

## யாழ். மாநகர சபையில் தீர்மானம்

நிதர்சன் வினோத்



எதிர்வரும் மார்ச் மாதம் மூன்றாம் திகதி முதல் ஐந்தாம் திகதி வரை நடைபெறவுள்ள சர்வதேச வர்த்தகக் கண்காட்சியின் ஏற்பாட்டாளர்கள், யாழ். மாநகர சபைக்கு வழங்க வேண்டியுள்ள நிலுவையைச் செலுத்தத் தவறும் பட்சத்தில், 2023ஆம் ஆண்டுக்கான சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை நடத்த அனுமதி வழங்குவதில்லை என்று யாழ். மாநகர சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையின் மாதாந்த கூட்டம் நேற்று காலை 10 மணியளவில், மேயர் இம்மானுவல் ஆனோர்ல்ட் தலைமையில் கூடியதுபோது, நடைபெறவுள்ள சர்வதேச வர்த்தகக் கண்காட்சிக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் ஆராயப்பட்டது. இந்த விவாத்தின் போதே, மேற்குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2019 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற சர்வதேச வர்த்தகக் கண்காட்சிகளுக்கான வரி, மற்றும் இதர கட்டணமாக சுமார் 39 இலட்சம் ரூபாய் செலுத்தப்படாமல் நிலுவையிலுள்ள நிலையில், 2023ஆம் ஆண்டு கண்காட்சியை நடத்துவதற்கான அனுமதிக்கு விண்ணப்பிக்கப்பட்டு உள்ளது.

இந்நிலையில் நிலுவையைச் செலுத்தாமல் அனுமதி வழங்குவதில்லை என்றும், மாநகர சபையால் வழங்கப்படும் சுகாதார சேவைகள் உட்பட நலச்சேவைகள் எதையும் வழங்குவதில்லை எனவும் சபையில் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

# அகில இலங்கை சைவமகா சபையால் இரத்ததான முகாம்

நிதர்சன் வினோத்

மகா சிவராத்திரியை முன்னிட்டு, அகில இலங்கை சைவ மகா சபையால் வருடா வருடம் அனுஷ்டிக்கபடும் சிவவாரம், இவ்வருடமும் பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி முதல் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இக்காலப்பகுதியில் சிரமதான பணிகள், இரத்ததானம் உட்பட்ட பல சமூக சேவைகளை நாடாளாவியரீதியில் அகில இலங்கை சைவ மகா சபை முன்னெடுத்து வருகிறது. இந்நிலையில் நேற்று (16) தினம் இரத்ததான முகாம் கீரிமலை குழந்தை வேல் சுவாமிகள் அறப்பணி மைய அரங்கில் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண கலாசார நிலையத்தை

# தமிழ் மக்களிடமே வழங்க வேண்டும்

நிதர்சன் வினோத்

யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தை தமிழ் மக்களிடமே வழங்க வேண்டுமென, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி விக்கினேஸ்வரன் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய அரசின் நிதி உதவியில் யாழில் அமைக்கப்பட்ட கலாசார நிலையம் தொடர்பாக, ஊடகங்களுக்கு நேற்று (16) கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இவ் விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

யாழ்ப்பாண கலாசார மண்டபம், தமிழ் மக்களுக்கென்று இந்தியாவால் வழங்கப்பட்டது. ஆகவே அதைப் பராமரிப்பது, கலாசார நிகழ்வுகளை நடத்துவது என அனைத்தும் தமிழ் மக்களால் தான் இருக்க வேண்டும். அவர்கள் கையில் முழுப் பொறுப்பும் இருக்க வேண்டும்.

இதைவிடுத்து மத்திய அரசாங்கம், அதற்கு ஒரு குழு அமைத்து, தானே செயற்படுத்துவது அல்லது வைத்திருப்பது முறையானது அல்ல. அதனை ஏற்றுக் கொள்ளவும் முடியாது. ஐந்து வருட காலத்துக்கு அதற்குரிய செலவுகளை தருவதாக இந்தியா கூறியிருப்பதால், எங்களுடைய மாநகர சபையே இதைக் கொண்டு நடத்தலாம் என்று நம்புகிறேன்.

எனினும், இந்த விடயத்தை முழுமையாக பரிசீலித்து, தமிழ் மக்கள் தங்களுடைய கலாசார மண்டபத்தை தாங்களே பாவிக்க கூடிய வகையிலும் பராமரிக்கக் கூடியதான சந்தர்ப்பத்தை கொடுக்க வேண்டுமென்று ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றேன் என்றார்.



தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை முன்வைக்க

# சிங்களத் தலைவர்கள் எவரும் திராணியற்றவர்கள்

சுப்பிரமணியம் பாஸ்கரன்

சிங்களத் தலைவர்கள் யாரும் தமிழ் மக்களுக்கான ஒரு அரசியல் தீர்வை முன்வைக்க திராணியற்றவர்களாகவே இருக்கின்றனர் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்

நெடுந்தீவு பிரதேச சபைக்காக தமிழரசு கட்சி சார்பில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் களின் தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், கடந்த காலத்தில் நோர்வே அனுசரணையில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஜெனீவாவில் பலகட்ட பேச்சுக்கள் நடைபெற்றன. அவை அனைத்தும் தமிழர்கள் கொண்டிருந்த ஆயுத பலத்தை மையமாகக் கொண்டே நடைபெற்றுள்ளன. அந்தக் காலப்பகுதியில் நாங்கள் ஒரு பலமான சக்தியாக இருந்தோம். அப்போது எல்லோரும் எங்களை திரும்பிப் பார்த்தனர்.

சிங்கள தலைவர்கள் எவரும், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை முன்வைக்கக்கூடிய திராணியற்றவர்கள். குறிப்பாக சஜித் பிரேமதாஸ, வடக்கு - கிழக்கு இணைந்த அரசியல் தீர்வை முன்வைக்கின்றேன் என்று கூற முடியுமா? இல்லை; அதேபோல, ஜே.வி.பியின் அநுர குமார திஸாநாயக்கவால் கூற முடியுமா? வடக்கு - கிழக்கைப் பிரித்ததும் ஜே.வி.பிதான். ஆனால், வடக்கு - கிழக்குக்கான அரசியல் தீர்வை வைக்க முடியுமா?

நெடுந்திவு பிரதேசத்தில் அவர்களுடைய கட்சிகளும் தேர்தலில் போட்டியிடுகின்றன. அதாவது தமிழ் மக்களினுடைய வாக்குகளை சிதைத்து, அவர்களுடைய பலத்தை இல்லாமல் செய்வதற்கு, இவ்வாறு தேர்தலில் களம் இறக்கப்பட்டிருக்கின்றார்கள் என்றார்.

# பாரவூர்தி மோதியதில் ஒருவர் மரணம்

ஷேன் செனவிரத்ன

பள்ளேகல இராணுவ முகாமிலிருந்து யாழ்ப்பாணம் வரை பயணித்த 40 அடி நீளமான இராணுவத்துக்குச் சொந்தமான பாரவூர்தியொன்று வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் அலவத்துகொட பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்களுடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் பலத்த காயமடைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் (15) இடம்பெற்ற இந்த விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள்களை செலுத்திச் சென்ற இருவரும் மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது, 58 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தையடுத்து பாரவூர்தியின் சாரதி மேலதிக நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி

# பணமோசடியில் ஈடுபட்ட மற்றுமொருவரும் கைது

ராமு தனராஜா

வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்று தருவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்ட மேலும் ஒரு சந்தேக நபர், பசறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுளை பகுதிகளில் உள்ள பெருந்தோட்ட இளைஞர்களை இலக்கு வைத்து வெளிநாடுக்கு அனுப்புவதாக கூறி, பண மோசடியில் ஈடுபட்டதாக பதுளை, பசறை, லுணுகலை ஆகிய பொலிஸ் நிலையங்களில் பாதிக்கப்பட்ட இளைஞர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மோசடி தொடர்பில் பதுளை பொலிஸாரால் இருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது, சந்தேக நபர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு பதுளை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதேபோல் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய லுணுகலையைச் சேர்ந்த அதிபர் ஒருவரும் லுணுகலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது, குறித்த அதிபரை எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த நிலையில் லுணுகலை பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றின் 43 வயதான காவலாளியை பசறை பொலிஸார் கைது செய்து, நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது, சந்தேக நபரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கவரவில ஆரம்ப பிரிவு பாடசாலை மாணவர்கள்

# உயிரச்சத்துடன் கல்வியை தொடர்கின்றனர்



நீலமேகம் பிரசாந்த்

ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட சாமிமலை, கவரவில ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள், உயிர் பயத்தில் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும் நிலை உருவாகியுள்ளதாக பாடசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கவரவில ஆரம்ப பிரிவு பாடசாலை ஆரம்பத்தில் தொழிற்சாலையிலேயே கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளதுடன், பின்னரான காலங்களில் பாடசாலைகளுக்கு புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டன.

எனினும் அங்கு இடப்பற்றாக்குறையும் வளப்பற்றாக்குறையும் காணப்படுவதால் தரம் மூன்று மற்றும் சங்கீத, நடன வகுப்புகள் குறித்த பாழடைந்த தொழிற்சாலைகளிலேயே தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

தொழிற்சாலையில் தற்போது பலகைகளும் கூரைத்தகடுகளும் கரையான் அரிப்பிற்கு உள்ளாகியுள்ளதோடு உறுதியற்ற நிலையும் ஏற்பட்டுள்ளது.

மேலும் மழைக் காலங்களில் மழைநீர் கூரை வழியாக உட்புகுகின்ற அதேவேளை, காற்று வீசும் சந்தர்ப்பங்களில் முழு தொழிற்சாலையும் அசையும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அத்தொழிற்சாலையில் கல்வி கற்கும் மாணவர்களும் கற்பிக்கும் ஆசிரியர்களும் உயிர் பயத்துடனே கற்க வேண்டிய சூழல் ஏற்படுவதாகவும் எந்நேரத்தில் எது வேண்டுமென்றாலும் நடக்கலாம் எனவும் பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் கல்வி அமைச்சும் தலையிட்டு புதிய கட்டடத்தையோ அல்லது பாதுகாப்பான சூழலையோ வழங்குமாறு பாடசாலை நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# மின்சாரம் தாக்கி ஒருவர் பலி

ஆ.ரமேஸ்

இராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சென்ஜோன்ஸ் தோட்டத்தில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

எஸ்கடேல் தோட்டத்தைச் சேர்ந்த 42 வயதான ஆறுமுகம் செல்வராஜ் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் (15) மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக இராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

தனது விவசாய உற்பத்திக்கு மின்சாரம் ஊடாக தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தை இயக்கியுள்ளார்.

இதன் போது இயந்திரத்திற்கான மின்சாரம் பாய்ச்சும் வயர் பழுதாகிய நிலையில், அதைச் சரி செய்ய முற்பட்ட வேளையில் மின்சாரம் தாக்கி அருகிலிருந்த கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்துள்ளதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

# வேட்பாளர்கள், சிவில் அமைப்பு பிரதிநிதிகள் தெளிவுபடுத்தப்பட்டனர்

என்.ஆராச்சி

பெப்ரல் அமைப்பு மற்றும் மார்ச் 12 அமைப்பு என்பன இணைந்து இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளை தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் நாடுபூராகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைய குறித்த வேலைத்திட்டம் நேற்று (16) கேகாலை, அம்பசெவன ஹோட்டலில் நடைபெற்றது.

இதன்போது தேர்தல் செலவுகள் ஒழுங்குப்படுத்தல் சட்டம் மற்றும் சொத்து பொறுப்புகள் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டதுடன் இதன் வளவாளர்களாக சட்டத்தரணி ஜயந்த தெஹியத்தகே, சமூக செயற்பாட்டாளர் கலாநிதி ஜயந்த உக்வத்த ஆகியோர் கலந்துகொண்டனர்.



# மலையகத்தின் பிரதான வனப்பகுதிகளில் தொடரும் தீ பரவல்கள்

ராமு தனராஜா, ரஞ்சித் ராஜபக்ஷ

மலையகதத்தில் தொடரும் வரட்சியுடனான வானிலையால், பல வன பகுதிகளில் தீ பரவல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இதற்கமைய, வெலிமடை, கந்தேபூல்பொல வனப்பகுதியில் நேற்று (16) காலை 6.00 மணியளவில் ஏற்பட்ட தீயால் சுமார் 12 ஏக்கர் எரிந்து நாசமடைந்துள்ளது.

அத்துடன் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக தியத்தலாவை விமானப்படை முகாமில் இருந்து சுமார் 40 விமான படையினர் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதேவேளை, போபத்தலாவ மலைப் பகுதியில் நேற்று முன்தினம் (15)மாலை தீ பரவல் ஏற்பட்டதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மலைப் பகுதிக்கு அடிவாரத்தில் அமைந்துள்ள ரொக்கில் தோட்டத்துக்குரிய யூக்கலிப்டஸ் மரங்கள் அடர்ந்துள்ள பகுதியிலேயே இத்தீபரவல் ஏற்பட்டது.

மலையகத்தில் நிலவும் வரட்சியுடனான வானிலையைப் பயன்படுத்தி சிலர் இவ்வாறு வனங்களுக்கு தீ வைப்பதாகவும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.









## தளவாடங்கள் வழங்கி வைக்கப்பட்டன

பதுளை, தெல்பெத்த தோட்டத்தில் இயங்குகின்ற ஸ்ரீராம் பாலர் பாடசாலையின் பௌதீக வள குறைபாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கத்துடன், கிளிநொச்சி சிறுவர் இல்லம், சுமார் பத்து இலட்சம் ரூபாய் பெறுமதியான தளவாடங்களையும் கற்றல் உபகரணங்களையும் வழங்கி வைத்தது.

(நடராஜா மலர்வேந்தன்)

# ஜனநாயக நாட்டில் ஜனநாயகத்துக்கு இடமில்லை

எஸ். கே. குமார்



இந்த நாட்டில் வாழும் தமிழர்களின் உரிமைக்காக அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை கொண்டுவரும் போது,சிங்கள இனவாதிகள் எதிர்க்கின்றார்கள் என தெரிவித்துள்ள மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினருமான ஆர். இராஜாராம், நாட்டில் சமத்துவம், அகிம்சை, இன, மத ஒற்றுமை பற்றி போதிக்கும் பௌத்த மத குருமார்களும் தமிழர்களின் உரிமைகள் என்று வரும்பொழுது பாதையில் இறங்கி எதிர்ப்பு போராட்டங்கள் நடத்துகின்றனர் என்றார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

இந்த நாட்டில் இனங்களின் ஒற்றுமையை ஒருசில இனவாத அரசியல்வாதிகளால் பிளவுகள் ஏற்படுத்துவதாலே நாட்டின் அபிவிருத்திகள் பாதிக்கப்படுகின்றன.

நாட்டில் ஒற்றுமை, சமத்துவம், தர்மத்தை பற்றி பேசும் பௌத்த மத குருமார்களே நாட்டின் நிலவும் ஒற்றுமையை சீர்குலைப்பதற்காக பாதையில் இறங்கி போராட்டம் நடத்துவதை பார்க்கும் பொழுது நாட்டில் எவ்வாறு மக்கள் ஒற்றுமையாக வாழ்வது?

இன்று இந்த நாட்டில் ஜனநாயக ரீதியில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடத்துவதற்கு தேர்தல் வேட்பு மனுக்கள் பெற்று தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர், இப்பொழுது அந்தத் தேர்தலை கூட நடத்த முடியாமல் ஆட்சியாளர்கள் திண்டாடுகின்றார்கள்.

அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் பங்காளி கட்சியினரும் தேர்தலுக்கான தேர்தல் பிரசாரங்களை ஆரம்பித்துள்ள இவ்வேளையில் தேர்தலை ஒத்தி வைப்பதற்கான காரணத்தை அரசாங்கத்திடம் பங்காளி கட்சிகள் கேட்காமல் இருப்பது வெட்கித் தலைகுனிய வேண்டும்.

எனவே இந்த நாடு ஜனநாயக நாடு; ஜனநாயக ஆட்சி என்று கூறிய போதிலும் ஜனநாயகத்திற்கு இங்கு இடமில்லை என்றுதான் கூறவேண்டும். இந்த நாட்டில் ஜனநாயக ஆட்சி நடைமுறைக்கு வருகின்றதோ அன்றுதான் இந்த நாடு பஞ்சத்திலிருந்து மீண்டு, நாடு அபிவிருத்தியடைந்து, மக்கள் சுபீட்சமாக வாழமுடியும் என கூறினார்.

நுவரெலியா மாவட்ட சர்வ மத தலைவர்களின்

# மாநாடு கொட்டகலையில் நடைபெற்றது

டி சந்ரு



நுவரெலியா மாவட்டத்தின் 12 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் பொருத்தமானவர்களை தெரிவு செய்வதற்கான ஒருமித்த கருத்துக்கான திட்டங்களை தயாரிப்பதற்காக நுவரெலியா மாவட்ட சர்வ மத தலைவர்களின் மாநாடு கொட்டகலையில் நேற்று (16) நடைபெற்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு நுவரெலியா மாவட்டத்தில் பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தி சுமார் 3,000 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ள நிலையில், மக்களுக்கு ஆதரவான ஊழல், மோசடியற்ற வேட்பாளர்களை தெரிவு செய்வது, உள்ளூராட்சி அமைப்புகளிடமிருந்து பயனுள்ள சேவைகளை எவ்வாறு பெறுவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் நுவரெலியா மாவட்ட சர்வமதக் குழுவின் கீழ் கடமையாற்றும் மதத் தலைவர்கள் மற்றும் சிவில் ஆர்வலர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# ரதல்ல மைதானத்தில் பயிற்சிகளில் ஈடுபடவுள்ள இலங்கை வீரர்கள்

ரஞ்சித் ராஜபக்ஷ



நானுஓயா, ரதல்ல மைதானத்தில் சர்வதேச பயிற்சி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக குறித்த மைதானம் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.

ரதல்ல மைதானமானது, திம்புளை விளையாட்டு கழகத்தின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருவதுடன், அந்த அமைப்பின் இணக்கப்பாட்டுடன் நியுசிலாந்து அணியுடனான போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள இலங்கை அணி, அப்போட்டிகளுக்கு முன்னர் ரதல்ல மைதானத்தில் பயற்சிகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இன்று (17) தொடக்கம் 23ஆம் திகதி வரை இந்த மைதானத்தில் இலங்கை அணி பயிற்சிகளில் ஈடுபடவுள்ளது.

ரதல்ல மைதானம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் கடும் குளிர் நிலவுவதால் இங்கு முன்னெடுக்கப்படும் பயிற்சிகள் மூலம் நியுசிலாந்து அணியுடனான போட்டிகளை இலங்கை அணி சிறப்பாக முகம்கொடுப்பதற்காக இந்த மைதானத்தை பயிற்சிக்காக வழங்க தம்புளை விளையாட்டு கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

# கட்டணம் அதிகரித்துவிட்டது; இனி தடையின்றி மின் வழங்கப்படுமா?

ஆறு மாதங்களுக்குள் இரண்டாவது தடவையாக மின்சாரக் கட்டணம் அதிகரிக்க அனுமதி கிடைத்துள்ளதாக, இலங்கை மின்சார சபை அறிவித்திருந்தது. பெப்ரவரி 15ஆம் திகதி முதல் அமலுக்கு வரும் வகையில், மின்சாரக் கட்டணத்தை 66 சதவீதத்தால் உயர்த்துவதற்கே இவ்வாறு அனுமதி கிடைத்திருந்ததாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

மின்சாரக் கட்டண அதிகரிப்பு என்பது, சாதாரணமாக வீடுகளில், அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் மின்கட்டண உயர்வு என்பதற்கு அப்பால் சென்று, நாம் அனுபவிக்கும் அனைத்து உற்பத்திப் பொருட்களிலும் தாக்கத்தை செலுத்தும் காரணியாக அமைந்திருக்கும்.

இந்த மின்கட்டண அதிகரிப்பைத் தொடர்ந்து, எதிர்வரும் நாள்களில் அதிகரிக்கப் போகும் விலைகளில், நீர்க் கட்டணம், தொலைபேசிக் கட்டணம் போன்றவற்றுடன் ஐஸ்கிறீம், பால், பாண், சிற்றுண்டி வகைகள் என, குளிர்சாதனப் பெட்டியில் வைத்துப் பேணும் அனைத்துப் பொருட்களும் உள்ளடங்கியிருக்கும்.

கடந்த கால நிர்வாக முறைமையில் தவறைச் சுமத்திவிட்டு, எதிர்கால மின் உற்பத்தித் தேவைக்கு அவசியமான எரிபொருள், நிலக்கரி என்பவற்றைக் கொள்வன செய்வதற்காக, இந்த மின்சாரக் கட்டண அதிகரிப்பு அத்தியாவசியமானது என மின்சக்தி அமைச்சர் அண்மையில் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

இத்தகைய தவறான தீர்மானங்கள், கடமைகளை முறையாக மேற்கொள்ளாமை போன்றவற்றுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள், சமூகத்தில் சுதந்திரமாக நடமாடும் நிலையில், அதன் விளைவு நுகர்வோர்களாகிய பொதுமக்களையே பாதித்துள்ளது.

கட்டண அதிகரிப்புக்கு எதிராகக் குரலெழுப்பிய பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளரை அடக்கும் வகையில், அந்த ஆணைக்குழுவின் அங்கத்தவர்களை இராஜினாமா செய்ய வைத்து, அரசாங்கத்தின் தேவைகளை நிறைவேற்றக் கூடியவர்களை அதில் நியமித்து, இந்தக் கட்டண அதிகரிப்பை வெற்றிகரமாக, தமக்கு சாதகமாக அரசாங்கம் நிறைவேற்றிக் கொண்டுள்ளது என்பதை அனுமானிக்க முடிகின்றது.

அடுத்ததாக, இன்னும் சில தினங்களில் ஆணைக்குழுவின் தவிசாளரும் தமது பதவியை இராஜினாமா செய்தால் அது ஆச்சரியப்படுவதற்கில்லை.

சர்வதேச நாணய நிதியத்தால் இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்புக்கு சில நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பூர்த்தி செய்யும்பட்சத்தில் மாத்திரமே, இலங்கைக்கு வழங்குவதாக தெரிவித்த 2.9 பில்லியன் அமெரிக்க டொலரை அந்நிதியம் பெற்றுக் கொடுக்கும். இதனை எதிர்வரும் மார்ச் மாதத்தில் பெற்றுக் கொள்வதற்கான கடும் முயற்சியில், இலங்கை ஈடுபட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. அதன் ஓர் அங்கமாகவே இந்த கட்டண அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டு இருக்கலாம்.

சரி! பொதுமக்கள் மீது இவ்வாறு சுமைக்கு மேல் சுமை ஏற்றப்படுகின்ற போதிலும், நாட்டின் நிர்வாகத்திலுள்ள 225+1 ஆனவர்கள், எவ்வாறான தியாகத்தை செய்துள்ளார்கள்? ஆளும் தரப்பிடம் கேட்டால், கடந்த ஆண்டில் தமது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதை கூறுவார்கள். அவற்றை நிர்மாணிக்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மின்கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், நேற்று (16) முதல் மின்துண்டிப்பு இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள்ள போதும், தொடர்ந்தும் தடையின்றி மின்சாரத்தை விநியோகிப்பார்களா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

எந்தத் தீங்கு செய்தாலும், அதைச் செய்தவர்களுக்கு அதற்கேற்ப வினைகள் வந்தே தீரும். இது இயற்கையின் விதி; எவரும் தப்பிக்க முடியாது. ஆட்சி செய்பவர்களுக்கும் இதே தீர்ப்புத்தான் அளிக்கப்படும்.

சகல வசதிகளுடன் வாழும்போது, அநேகர் தாங்கள் நினைத்தபடி எப்படியும் வாழலாம் என எண்ணிக்கொள்கின்றார்கள். காலப்போக்கில் செல்வாக்குச் சிதறும்போது, அவர்களின் சுதந்திரம் பறிபோய் ஏதிலிகளாகின்றார்கள்.

பாவம் செய்பவர்களுக்கு அது தவறான செயல் என நன்றாகவே தெரியும். ஆனால் ஆணவம், அகந்தை என்பன சகலதையும் மறைத்துவிடுகின்றன.

ஆணவமே இருள்நிலைதான். ஒளியை விரும்பாது. அறிந்தும் அறியாதது போல் பலர் வாழ்கின்றார்கள்.

மனிதர் எவரும் நடப்பது நடக்கட்டும் எனத் தான்தோன்றித்தனமாகச் செய்ய முடியாது. எல்லா மதங்களும் நீதி, நியாயங்களைத் தான் சொல்லியபடி இருக்கின்றன.

டாம்பீகமாக வேடம் போட்டாலும், உள்ளத்தில் அழுக்கு இருந்தால், வர்மம், வேட்கை, அடங்காத கோபம் என்பன வந்துவிடுகின்றன. நற்சிந்தனைகளை உணர்வதே சிறப்பு!.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

வலதுசாரி தீவிரவாதத்தின் நிழலில் – 15:

# கிழக்காசியாவில் கெடுபிடிப்போர்

## அதிவலதுவாதத்தின் அடிநாதம்



தெ. ஞாலசீர்த்தி
மீநிலங்கோ

தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் தீவிரவலதுசாரிகளின் அணிதிரட்டலும் கிழக்காசிய அதிவலதுசாரி அரங்காடிகளின் நடத்தையும் அரசியல் உபாயங்களும், ஐரோப்பா மற்றும் வடஅமெரிக்காவில் உள்ள அவர்களது சகாக்களிடமிருந்து வேறுபடுகின்றன என்பதை, கடந்த இருவாரங்களில் பார்த்தோம்.

தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் உள்ள தீவிரவலதுசாரி சக்திகள், கடந்துபோன எதேச்சதிகார அல்லது கொலனித்துவ காலத்தை மகிமைப்படுத்துவதில், அரசியல் ரீதியாக பிற்போக்குத்தனமாக உள்ளனர்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய தசாப்தங்களில் இருந்து மாறாத கருத்தியல் கூற்றுகளை, தங்கள் அடிப்படைகளாகக் கொண்டுள்ளனர். இதன்வழி, 'மற்றவர்களை' பற்றிய வெறுப்புணர்வும் வரலாறு பற்றிய மாற்றுப்பார்வையும் கம்யூனிச எதிர்ப்பும், இவர்களது ஆதார சுருதியாகவுள்ளது.

ஆசியாவில், அமெரிக்கா தலைமையிலான கெடுபிடிப்போர் தோற்றுவித்த புவிசார் அரசியலால், இந்த வேறுபாட்டை விளக்கவியலும்.

போருக்குப் பிந்தைய ஜப்பானிலும் தென்கொரியாவிலும் தீவிரவலதுசாரி உயரடுக்குகள் பலப்படுத்தப்பட்டன. ஐரோப்பா அல்லது வட அமெரிக்காவுக்கு எதிராக ஆசியாவில் முடிவடையாத கெடுபிடிப்போர், தீவிரவலதுசாரிகளின் நிறுவன நிலைத்தன்மையையும் அதன் பழைய கம்யூனிச எதிர்ப்பு மற்றும் கொலனித்துவ இனவெறியின் அரசியல் அதிர்வலையையும் அனுமதித்தது. எனவே, கிழக்கு ஆசியாவில் ஜனநாயக அரசியல் என்பது, கெடுபிடிப்போரின் அடிநாதத்தை முன்னிறுத்துகிறது.

தென்கொரியாவின் தீவிரவலதுசாரிகள், முதன்மையாக சர்வாதிகார உயரடுக்கினரையும் வயதான குடிமக்களைக் கொண்டுள்ளனர். அவர்கள் கடந்த எதேச்சதிகார தலைவர்களை மகிமைப்படுத்துகிறார்கள். வடகொரிய சார்பு கம்யூனிஸ்டுகள் என்று முத்திரை குத்துவதன் மூலம் ஜனநாயக, முற்போக்கு சக்திகளை கொச்சைப்படுத்துகிறார்கள்.

ஜப்பானில், நிறுவன மற்றும் நிறுவனத்துக்கு அப்பாற்பட்ட தீவிரவலதுசாரி குழுக்கள் இரண்டும் கொலனித்துவ தவறுகளை மறுப்பதில் ஒன்றுபட்டுள்ளன. பல தலைமுறைகளாக ஜப்பானில் வாழும் பழைமையான 'ஜைனிச்சி கொரியர்'களை இலக்காகக் கொண்டுள்ளனர்.

இருநாடுகளிலும் உள்ள தீவிரவலதுசாரிகள் ஜனரஞ்சகத்தை நாடவில்லை; ஊழல் நிறைந்த அரசியல் ஸ்தாபனத்தை நிராகரிக்கவில்லை. மாறாக, தென்கொரியாவில் ஜனநாயகத்தையும் மக்கள் இறைமையையும் நிலைநாட்டப் போராடும் முற்போக்கு சக்திகளை இலக்கு வைக்கின்றன.

தென் கொரியாவில் உள்ள சீர்திருத்தவாத முற்போக்குக் குழுக்கள், மக்கள் இறையாண்மையை மீறி, தங்கள் சொந்தப் பைகளை செழுமைப்படுத்திக் கொண்ட சர்வாதிகார உயரடுக்குகளுக்கு எதிராக, ஜனநாயகத்தை மீட்டெடுப்பதிலும் ஆழப்படுத்துவதிலும் பொது மக்கள் பங்கை வலியுறுத்தி நீண்ட காலமாகப் போராடுகிறார்கள். இவர்களே தென்கொரியாவில் ஜனநாயகமயமாக்கலுக்கு வழிசெய்து, 1987இல் இராணுவ ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்த மக்கள் எழுச்சிகளை ஏற்பாடு செய்தனர். இவர்களை ஜனரஞ்சகவாதிகள் என்றும் 'அரசின் எதிரிகள்' என்றும் தீவிரவலதுசாரிகள் முத்திரை குத்துகிறார்கள்.

கிழக்கு ஆசியாவில் தீவிரவலதுசாரிகள் தேசியவாத சாய்வுகளை எச்சரிக்கையோடு பயன்படுத்துகிறார்கள். தேசியவாதம் என்பது, தென்கொரிய வலதுசாரிகளுக்கு மட்டும் பிரத்தியேகமானதல்ல; ஏனெனில், மத்திய-இடதுசாரி சக்திகளும் கொலனித்துவ அநீதிகளை சரிசெய்வதற்கும் அமெரிக்காவுடனான சமமற்ற உறவுகளை சரிசெய்வதற்கும், அவர்களின் விருப்பத்தில் தேசியவாதத்தின் சமத்துவத் தன்மையை ஆதரிக்கின்றன.

பசுபிக் போரின்போது, ஜப்பானிய இராணுவத்தின் இராணுவ பாலியல் அடிமை முறை ('ஆறுதல் பெண்கள்') போன்ற தீர்க்கப்படாத கொலனித்துவ பிரச்சினைகள் வரும்போது, தென்கொரிய முற்போக்குவாதிகள் தீவிர வலதுசாரிகளை விட, தேசியவாதிகளாக உள்ளனர்.

ஜப்பானில் உள்ள தீவிரவலதுசாரிகள், ஜப்பான்-அமெரிக்க இராணுவக் கூட்டணிக்கு எதிரான, தங்கள் போராட்டத்தில் ஓர் அமைதிவாத தேசியவாதத்தை நாடியுள்ளனர். இது அமெரிக்க மேலாதிக்க சக்தியின் திணிப்பாகவும் ஜப்பானின் தேசிய இறையாண்மையின் சமரசமாகவும் பார்க்கப்படுகிறது. ஜப்பானிய தீவிர வலதுசாரிகளின் முக்கியமான அம்சம், அவர்களின் ஏகாதிபத்திய தேசியவாதமாகும். கொலனித்துவ தவறுகளை மறுப்பது, 'ஜைனிச்சி கொரியர்'களை குறிவைப்பது ஆகியன அவர்களின் முக்கிய பணியாகவுள்ளது.

தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் உள்ள தீவிரவலதுசாரிகள், தங்கள் மேற்கத்திய சகாக்களிடமிருந்து வேறுபடுகிறார்கள். இவர்கள் கொலனித்துவ கடந்த காலத்தை மகிமைப்படுத்த, 'திருத்தல்வாத' வரலாற்றுக்கு முன்னுரிமை கொடுக்கிறார்கள். அவர்களின் கருத்தியல் கூற்றுகள், போருக்குப் பிந்தைய தசாப்தங்களில் இருந்து மாறாமல் உள்ளன.

இதை ஆழமாக அவதானித்தால், அவர்கள் கெடுபிடிப்போரின் போது நிறுவப்பட்ட தங்கள் அரசியல், பொருளாதார, கருத்தியல் மேலாதிக்கம் ஆகியவற்றை மீண்டும் நிலைநிறுத்த விரும்புகிறார்கள். ஏனெனில், அவர்களின் அரசியல் பார்வை, கெடுபிடிப்போர் சகாப்தத்தின் உச்சக்கட்டத்துக்குத் திரும்புகிறது. அவர்களின் எதிரிகள், அந்தக் காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட நீண்டகால உள்நாட்டு அரங்காடிகள்.

தென்கொரிய தீவிரவலதுசாரிகள், தாராளவாத ஜனநாயகத்துக்குத் திரும்புவதை ஆதரிக்கிறார்கள். இது கெடுபிடிப்போரின் போது, நிறுவப்பட்ட கம்யூனிச எதிர்ப்பு சர்வாதிகார அமைப்பைத் தவிர வேறில்லை. இதனால்தான் அவர்களின் கருத்தியல் அமைப்பு, இன்னும் வடகொரிய எதிர்ப்பு மற்றும் கம்யூனிஸ்ட் எதிர்ப்பு, மக்கள் ஜனநாயகத்துக்காக வாதிடும் சீர்திருத்த-முற்போக்கு சக்திகளுக்கு கடுமையான எதிர்ப்பாக உள்ளது.

தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் உள்ள தீவிரவலதுசாரிகள் தனிப்பட்ட உரிமைகள், சமத்துவம், பன்மைத்துவம் போன்ற தாராளவாத நெறிமுறைகளின் அடிப்படைக் கொள்கைகளுக்கு எதிரானவர்கள், இவர்கள், வன்முறை வழிகளில் தங்கள் எதிரிகளை அகற்றுவதற்கான விருப்பத்தை வெளிப்படுத்துகிறார்கள். இது, அவர்களின் வாய்மொழி அவதூறுகள், தனிப்பட்ட தாக்குதல்கள், உடல்ரீதியான ஊறுவிளைவிப்பு, போர்க்குணம்மிக்க முறைகளைப் பயன்படுத்துவதற்கான அச்சுறுத்தல் ஆகியவற்றில் வெளிப்படுத்தப்பட்டது.

மேற்கத்திய ஜனநாயக நாடுகளுடன் ஒப்பிடும்போது, ஆசியாவில் கெடுபிடிப்போர் எவ்வாறு வெளிப்பட்டது என்பதை ஆராய்வதன் மூலம், கிழக்கு ஆசியாவில் தீவிரவலதுசாரிகளின் கருத்தியல் உள்ளடக்கம் மற்றும் 21ஆம் நூற்றாண்டில் அவர்களின் அணிதிரட்டல் ஆகிய இரண்டும் விளக்கப்படலாம்.

இடதுசாரி-வலதுசாரி நிலைகள் என்பது, காலத்திலும் நாடுகளிலும் மாறுபடும் வரலாற்று மற்றும் சமூகக் கட்டமைப்பாகும். சமகால ஐரோப்பாவில், வெவ்வேறு உரிமைகோரல்களுடன் தீவிரவலதுசாரிகளின் மறுமலர்ச்சி, கிழக்கு ஆசியாவில் தற்போதைய தாராளவாதிகள் மத்தியில் அதே தீவிர சித்தாந்தங்களின் எதிரொலியை செயற்படுத்துகிறது.

ஐரோப்பா மற்றும் வடஅமெரிக்காவில் உள்ள நாடுகளுக்கு, கெடுபிடிப்போர் என்பது 1989இல் பெர்லின் சுவரின் வீழ்ச்சியுடன் முறையாக முடிந்தது, அதேவேளை, அது குளிர்ந்த நெருக்கடியில்லாத போராக இருந்தது. கெடுபிடிப்போர் நிர்ப்பந்தங்கள் நாசிச அட்டூழியங்களை முழுமையாக விசாரிக்கவோ, நாஜி ஒத்துழைப்பாளர்களின் தண்டனையை நடைமுறைப்படுத்தவோ அனுமதிக்கவில்லை.

கெடுபிடிப்போரின் இத்தகைய வித்தியாசமான அனுபவம், தீவிரவலதுசாரிகளுக்கு வாய்ப்பாக அமைந்தது. கம்யூனிச எதிர்ப்பின் பெயரால் எந்தவொரு கொடுமையையும் செய்ய முடிந்தது.

பல கொலனித்துவ நாடுகளுக்கு, கெடுபிடிப்போர் என்பது கொடூரமான உள்நாட்டுப் போர்கள் மற்றும் பிற அரசியல் வன்முறைகளை உள்ளடக்கிய சூடான போர்களின் சகாப்தமாக இருந்தது. கெடுபிடிப்போர் தொடங்கியவுடன், கிழக்காசியப் பிராந்தியத்தில் கம்யூனிச விரிவாக்கத்துக்கு எதிராக, வலுவான அரண் அமைப்பதற்கு அமெரிக்கா முன்னுரிமை அளித்தது. இந்த மேலாதிக்க நலன்களிலிருந்து, தென்கொரியாவில் கொலனித்துவ அரசையும் அதற்கு ஏதுவான சட்டக் கட்டமைப்புகளையும் மீண்டும் நிலைநிறுத்துவதை ஆதரித்தது.

ஜப்பானிய பேரரசரையும் மற்றைய போர்க் குற்றவாளிகளையும் அரசியல் பொறுப்புக்கூறலில் இருந்து அமெரிக்கா காப்பாற்றியது. கிழக்கு ஆசியாவில் இராணுவவாதம், அரச வன்முறை மற்றும் இன-தேசிய ஒற்றுமையை இயல்பாக்குவதன் மூலம் கொலனித்துவத்துக்குப் பிந்தைய தீவிர வலதுசாரி அமைப்புகள் கம்யூனிசத்துக்கு எதிராக ஒரு முதலாளித்துவக் காட்சிப் பொலிவை உருவாக்குவதற்குப் பயன்பட்டன. இது பழைமைவாத ஸ்தாபனத்தின் வலுவூட்டலுக்கும் சட்டபூர்வமாதலுக்கும் மேலும் பங்களித்தது.

கெடுபிடிப்போர் உத்தரவின் கீழ், தென்கொரியாவின் எதேச்சதிகார அரசு கம்யூனிச வடகொரியாவுக்கு எதிரான போராட்டத்தில், அதன் அரசியல் சட்டபூர்வமான தன்மையை உருவாக்கியது. அதேநேரத்தில் கம்யூனிச ஆதரவாளர்களை ஒழிக்கும் பெயரில், அரசியல் அதிருப்தியாளர்களை, விமர்சனத்தை வன்முறை கொண்டு அடக்குவதை நியாயப்படுத்தியது. இவற்றின் வழி கட்டற்ற வலது தீவிரவாதத்தை ஆசிர்வதித்தது.

போருக்குப் பிந்தைய ஜப்பானை நிர்வகித்த சக்திவாய்ந்த பழைமைவாதக் கூட்டமானது, முதலாளித்துவ விரிவாக்கம் மற்றும் ஒற்றை இனத்துவக் கட்டுமானத்தில் வெறித்தனமாக இருந்தது. அதன் கீழ், 'ஜைனிச்சி கொரியர்'கள் பரவலான சட்ட மற்றும் சட்டத்துக்குப் புறம்பான இனவெறிக்கு ஆளாகினர்.

சுருக்கமாக, கிழக்காசியாவில் கெடுபிடிப்போர் ஒழுங்கின் தொடர்ச்சிகளைப் புரிந்து கொள்ளாமல், தென்கொரியா மற்றும் ஜப்பானில் சமகால தீவிரவலதுசாரிகளின் கருத்தியல் கூற்றுகளையும் அணிதிரட்டல் முறைகளையும் எம்மால் முழுமையாக புரிந்து கொள்ளமுடியாது.

## கடிதங்கள்

திருமுறிகண்டி வெள்ளம் வழிந்தோடி

### குளத்தை சென்றடைய வேண்டும்

முல்லைத்தீவு, திருமுறிகண்டி கிராமத்தில் மழைக்காலத்தில் தேங்கும் வெள்ளத்தை, கிளிநொச்சி கனகாம்பிகைக் குளத்துக்கு வழிந்தோடுவதற்கான வழிகளை உருவாக்குமாறு, திருமுறிகண்டி கிராம மக்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

600 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில், மழைக்காலத்தில் பெருமளவு வெள்ளம், மக்கள் குடியிருப்புகளில் தேங்கி நிற்பதன் காரணமாக, மக்கள் பாதிக்கப்படுவதுடன் தொற்று நோய்களும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

வெள்ளம் வடிந்தோடாமைக்கான முக்கிய காரணமாக, வெள்ளம் வழிந்தோடுகின்ற வடிகான்களை மண்ணால் மூடி இருப்பதால், வெள்ளம் வழிந்தோட முடியாத நிலைமை காணப்படுகின்றது.

ஏ-9 வீதி புனரமைப்பின் போது, திருமுறிகண்டி கிராமத்தின் வெள்ள நீர் வழிந்தோடுவதற்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. அமைக்கப்பட்ட வடிகான்களை பொதுமக்கள் மண் கொண்டு நிரப்பும் போதும் தடுக்கப்படவில்லை.

மழை பெய்கின்ற போது, வெள்ளம் வழிந்தோடுவதற்கான வாய்ப்புகள் தடுக்கப்பட்டிருப்பதன் காரணமாக, திருமுறிகண்டியில் மழைக்காலத்தில் வெள்ளம் தேங்கிநிற்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

திருமுறிகண்டியின் வெள்ளம், கனகாம்பிகைக் குளத்தைச் சென்றடைவதற்கான வழிகளை, அதிகாரிகள் உருவாக்க வேண்டும் என்பதே திருமுறிகண்டி மக்களின் கோரிக்கையாகும்.

நடராசா கிருஸ்ணகுமார்.




பவர் நிறுவனத்துக்கு

# SAP Dare to Dream விருதுகள்

## 2023இல் விசேட கௌரவிப்பு

ஏபவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட், அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த *Dare to Dream* விருதுகள் 2023 இல், நிதிசார் மாற்றியமைப்புக்காக விசேட கௌரவிப்பு விருது வழங்கப்பட்டிருந்தது. இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வுக்கு SAP, ஜோன் கீல்ஸ் IT மற்றும் EY ஆகியன வலுவூட்டியிருந்ததன.

பவர் நிறுவனத்தினுள் பல்வேறு SAP தொழில்நுட்பங்கள் மற்றும் தீர்வுகளை பின்பற்றியிருந்ததனூடாக, பதிவு செய்திருந்த புத்தாக்கம், துரித மாற்றம் மற்றும் வெற்றிகரமான செயற்பாடுகள் போன்றவற்றை கௌரவிக்கும் வகையில் SAP இன் விசேட கௌரவிப்புத் திட்டத்தின் அங்கமாக இந்த விருது அமைந்திருந்தது.

2021 ஆம் ஆண்டில், *cloud deployment* இல் SAP S/4 HANA 2020 க்கு பாரிய மாற்றத்தை பவர் ஏற்படுத்தியிருந்ததுடன், *SAP Analytics Cloud Live reporting* ஐயும் பின்பற்ற ஆரம்பித்திருந்தது. அக்கால கட்டத்தில் இலங்கையில் இந்த நவீன தொழில்நுட்ப கட்டமைப்பை பயன்படுத்த ஆரம்பித்த முதலாவது நிறுவனமாகவும் பவர் திகழந்தது. இந்த கட்டமைப்பு மாற்றத்தில், cloud migration, technical migration with integration platform conversion, S/4 HANA migration with business process re-engineering, adaptation of SAP Mobility Platform மற்றும் *SAP Analytics Cloud* பிரயோகம் போன்றன அடங்கியிருந்தன.

இதனூடாக RISE ABC திட்டத்தை ஆரம்பிக்க முடிந்திருந்ததுடன், மேலும் பவரின் SAP கட்டமைப்பு மற்றும் வியாபார செயன்முறைகளை ஒன்றிணைக்கும் வகையிலும் அமைந்திருந்தது. அத்துடன், நிறுவனத்தின் டிஜிட்டல் பிரசன்னத்தையும், ஒட்டு மொத்த பெறுமதியையும் தனது செயற்பாட்டு செயன்முறைகளை உரிய வேளையில் பிரயோகித்து, புத்தாக்கமான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க உதவியாக அமைந்துள்ளது.

தொற்றுப்பரவல் உச்சக்கட்டத்தில் காணப்பட்ட காலப்பகுதியில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், *offline* முறையில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியிருந்தது. இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பரந்துள்ள பங்காளர்கள் மத்தியில் கட்டம்கட்டமாக செயற்படுத்த வேண்டியிருந்தது. பல்வேறு நெருக்கடிகள் காணப்பட்ட போதிலும், பவரினால் வெற்றிகரமாக இதர சகல வியாபார சவால்களுக்கும் முகங்கொடுத்து, இந்தச் செயற்றிட்ட காலப்பகுதியில், உரிய செலவு வரம்புகளுக்குள் வெற்றிகரமாக பூர்த்தி செய்ய முடிந்திருந்தது.

பவர் நிறுவனத்துக்கு இந்தத் திட்டத்தின் செயற்படுத்தல் என்பது பயனளிப்பதாக அமைந்திருந்தது. இதில் செயன்முறை எளிமைப்படுத்தல் மற்றும் தன்னியக்கமயப்படுத்தல்கள் மற்றும் டிஜிட்டல் முறையிலான கொள்முதல் செயன்முறை அடங்கலாக, கையிருப்புகள் முகாமைத்துவத்தில் சிறந்த செயன்முறைகளை பின்பற்றல், புதிய S/4 HANA நிதி மற்றும் கட்டுப்பாட்டு உள்ளம்சங்களுடன் ஏற்கெனவே காணப்படும் நிதிச் செயன்முறைகளை மீளக் கட்டியெழுப்பல் போன்றன அடங்கியிருந்ததுடன், இவை அனைத்தும், நிறுவனத்தின் ஆற்றல் மற்றும் அதிகளவு கிடைப்பனவு, சிறந்த உற்பத்தித் திறன், பாதுகாப்பு மற்றும் நெறிமுறையை மேம்படுத்த உதவியிருந்தன.

S/4 HANA உடன் டிஜிட்டல் core ஐ நிறுவியிருந்ததுடன், இதில் உள்வைக்கப்பட்ட AI, ML ஆற்றல்கள், பரந்தளவு தீர்வுக் கட்டமைப்புகளால் வலுவூட்டல் போன்றன அடங்கியுள்ளன. IOT, RPA மற்றும் blockchain புரட்சிகரமான தொழில்நுட்ப அம்சங்களால், பவருக்கு எதிர்காலத்தில் அவற்றை பயன்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்திருந்தது.

இலங்கையில் IBM நிறுவனத்தின் பிரவேசத்தைத் தொடர்ந்து, 1982 ஆம் ஆண்டில் டிஜிட்டல் யுகத்துக்கு மாறியிருந்த முதலாவது நிறுவனமாகவும் பவர் திகழ்கின்றது. அன்று முதல், தொடர்ச்சியாக தொழில்நுட்ப பரிணாம மாற்றங்களுக்கேற்ப தன்னையும் மாற்றியமைத்து வருவதுடன், சைபர் பாதுகாப்பு மற்றும் இடர் மீட்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதுடன், *machine learning, artificial intelligence, IoT* போன்றவற்றையும் பின்பற்றுகின்றது. விற்பனை செயலணி தன்னியக்கமயப்படுத்தலை நிறுவனம் ஆரம்பித்ததுடன், வழமையான நடமாடல், டேட்டா மற்றும் பகுப்பாய்வு போன்றவற்றுக்கு அப்பால் சென்று, பல்வேறு வியாபாரங்கள் மற்றும் விற்பனை நாளிகைகளை ஒன்றிணைக்கும் வகையில் அமைந்துள்ளது.

நெஸ்லே நிறுவனத்தின்

# இலங்கையில் முதல் தர விநியோகஸ்தராக மட்டக்களப்பின் ரஞ்சிதமூர்த்தி தெரிவு

■ *விரீ சகாதேவராஜா*

நெஸ்லே நிறுவனத்தின் இலங்கை ரீதியான 120விநியோகஸ்தர்களில் இவ்வருடம் மட்டக்களப்பு விஜேய் கொன்ஸ்ரக்ஷன் உரிமையாளர் தொழிலதிபர் கலாநிதி வினாயகமூர்த்தி ரஞ்சிதமூர்த்தி தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இலங்கையில் உள்ள 120 விநியோகஸ்தர்களில் மிகவும் சிறந்த நெஸ்லே உற்பத்தி பொருள் விநியோகஸ்தராக கலாநிதி ரஞ்சிதமூர்த்தி தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

நெஸ்லே பொருட்களுக்கான முதல்தர விநியோகஸ்தர் (SRI LANKA'S MOST OUTSTANDING DISTRIBUTOR AWARD) எனும் அகில இலங்கை விருதினை மட்டக்களப்பு விஜேய் கொன்ஸ்ரக்ஷன் நிறுவனம் பெற்றுக்கொண்டுள்ளது.

இந்த விருது வழங்கும் விழா அண்மையில் கொழும்பு ஷங்ரி-லா ஹோட்டலில் நடைபெற்றது. நெஸ்லே நிறுவனத்தின் தேசிய விற்பனை மாநாடு மற்றும் விருது வழங்கும் விழாவின் போதே இவ்விருது வழங்கப்பட்டது.

இதற்கான விருது நெஸ்லே நிறுவனத்தின் தற்போதைய முகாமைத்துவ பணிப்பாளர் ஜேசன் அவென்சினா, வருங்கால முகாமைத்துவ பணிப்பாளர் பேர்ன்ஹார்ட் ஸ்டெபான் மற்றும் இலங்கைக்கான விற்பனை சிரேஷ்ட உப தலைவர் ஜகத் வெதகேயினால் வழங்கி வைக்கப்பட்டது.

விருதை நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரான வி. றஞ்சிதமூர்த்தியின் மகனும் இந்நிறுவனத்தின் பிரதி முகாமைத்துவ பணிப்பாளருமான ற. விஜிபன் மற்றும் வி.ரஞ்சிதமூர்த்தியின் மகளும் நிறுவனத்தின்




பொதுமுகாமையாளருமான திருமதி விஜிதா நவரூபன் ஆகியோர் பெற்று கொண்டார்கள்.

மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத் தலைவரான கலாநிதி ரஞ்சிதமூர்த்தி பொதுச் சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்.

வருடா வருடம் நடத்தப்பட்டு வரும் இந்த விருது வழங்கும் போட்டி கடந்த மூன்று வருடங்கள் கொரோனா காரணமாக இடம் பெறவில்லை.

கடந்த 20 வருட காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் நெஸ்லே ஏக விநியோகஸ்தராக விஜய் கன்ஸ்ட்ரக்சன் கம்பனி தொடர்ந்து இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. அங்கு அவரது மகள், மகன் ஆகியோர் பிரதான பங்கை வகிக்கின்றார்கள்.

கடந்த கொரோனா காலகட்டத்திலும் சீரான சிறப்பான விநியோகத்தை மேற்கொண்டமையும் முதலிடம் பெற்றமைக்கு ஒரு காரணம். மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கக்கூடிய 1,250 கடைகளுக்கு நேரடியாக தனது 52 பணியாளர்களோடு இந்த விநியோகத்தை செய்து வருவது நெஸ்லே கம்பனியின் கவனத்தை ஈர்த்து இருக்கின்றது. இதற்கு முன்பும் ஒரு தடவை முதலிடத்தை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மும்பை

# ஆசைக் காதலிக்கு காதலன் செய்த கொடூரம்

மகாராஷ்டிராவின் பல்ஹார் மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஹர்திக் ஷா. இவர் கடந்த மூன்று வருடங்களாக மேகா என்ற செவிலியரைக் காதலித்து வந்துள்ளார்.

இந்நிலையில், இருவரும் கடந்த ஆறு மாதமாக ஒரே வீட்டில் வசித்து வந்தனர். இருவருக்கு இடையே அடிக்கடி சண்டை ஏற்பட்டு வந்ததால், அக்கம்பக்கத்தினர் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் புகார் அளிக்கவே, விசாரணை நடத்துவதற்காகவே ஹர்திக் ஷாவின் வீட்டுக்குச் சென்ற பொலிஸார், அங்கு மேகா கொலைசெய்யப்பட்டிருப்பதைக்கண்டு அதிர்ச்சியடைந்தனர்.



இதையடுத்து, மேகாவின் உடலத்தை மீட்ட பொலிஸார், அதைப் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். அதேசமயம், கொலை செய்துவிட்டு, வீட்டிலுள்ள சில பொருட்களை விற்று,டு அப்பணத்துடன் ரயிலில் தப்பிச் செல்ல முயன்ற ஹர்திக்கையும் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

புதுடெல்லி

# சலவை இயந்திரத்துக்குள் சிக்கிக் கொண்ட குழந்தை

புதுடெல்லியில், ஒன்றரை வயது ஆண்குழந்தையொன்று சலவை இயந்திரத்துக்குள் சிக்கிக் கொண்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று ஆடைகளைத் தோய்ப்பதற்காகக் குறித்த குழந்தையின் தாயார் சலவை இயந்திரத்துக்குள் நீரை நிரப்பி, அதற்குள் சலவைத் தூளை கலந்துவிட்டு ஆடைகளை எடுப்பதற்காக அறைக்குள் சென்றுள்ளார்.

இதன் போது குறித்த குழந்தை, அருகில் இருந்த கதிரையின் மீது ஏறி சலவை இயந்திரத்துக்குள் விழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சுமார் 15 நிமிடங்கள் வரை அக்குழந்தை சலவை இயந்திரத்துக்குள் இருந்துள்ளதாகவும், இதன்போது சலவைத்தூள் கலக்கப்பட்ட நீரை அக்குழந்தை அருந்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குழந்தையின் அலறல் சத்தத்தைக் கேட்டு அங்கு வந்த தாயார் உடனடியாகக் குழந்தையை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார்.

இதன்போது குழந்தையின் உடல் நீல நிறமாக மாறி இருந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து குழந்தைக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டுவந்த நிலையில் குழந்தையின் உடல் நிலையில் தற்போது முன்னேற்றம் அடைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சென்னை

# இனி பஸ்ஸுக்கும் ரயிலுக்கும் ஒரே பயணச் சீட்டு

சென்னையில் பஸ், புறநகர் ரயில், மெட்ரோ ரயில் என அனைத்திலும் ஒரே பயணச்சீட்டைப் பயன்படுத்தி, பயணம் செய்யும் திட்டத்தைச் செயற்படுத்த, சென்னை ஒருங்கிணைந்த போக்குவரத்து குழுமம் நடவடிக்கை எடுத்துள்ளது.



ஈரோடு

# முன்னாள் முதலமைச்சரால் பற்றியெரிந்த தென்னை மரம்

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் (அ.தி.மு.க ) ஈரோடு கிழக்கு தொகுதிக்கான இடைத்தேர்தல் பிரசாரமானது அண்மைக்காலமாகச் சூடுபிடித்து வருகின்றது.

அந்தவகையில், நேற்று முன் தினம் (15) ஈரோட்டில் முன்னாள் தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி பிரசாரத்தில் ஈடுபட்டார். இதன்போது, அவரை வரவேற்பதற்காக அக்கட்சியினர் வானவேடிக்கை நிகழ்ச்சியை ஒழுங்கு செய்திருந்தனர்.

அப்போது வெடிக்கப்பட்ட வெடியொன்று எதிர்பாராத விதமாக, அருகில் இருந்த தென்னை மரத்தின் மீது பட்டதால், தென்னை மரம் தீப்பிடித்து எரிய ஆரம்பித்துள்ளது.

இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதனையடுத்து அங்கு வந்த தீயணைப்புப் படையினர் விரைந்து செயற்பட்டு தீயை அணைத்தனர்.



ஆந்திரா

# கோவில் அலங்கார கோபுரம் சரிந்து விழுந்தது

ஆந்திர மாநிலம், பல்நாடு மாவட்டத்தில் உள்ள குருவையா பாளையம் கிராமத்தில் மகாசிவராத்திரியை முன்னிட்டு சிவன்கோவிலில் அலங்கார கோபுரம் நிறுவும் பணி இடம்பெற்று வந்தது.

சுமார் 110 அடி உயரம் கொண்ட குறித்த கோபுரமானது,டு 30 இலட்சம் இந்திய ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், சிலநாள்களுக்கு முன்னர், குறித்த கோபுரத்தை நிலை நிறுத்தும்போது, எதிர்பாராத விதமாக அக்கோபுரம் சரிந்து விழுந்துள்ளது. இவ்விபத்தில் ஐந்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



தெலுங்கானா

# கைம்பெண்ணுக்கு செருப்பு மாலை ஊர்வலம்

கைம்பெண்ணொருவருக்கு செருப்பு மாலை அணிவித்து, கிராம மக்கள் ஊர்வலமாக அழைத்துச் சென்ற சம்பவம் தெலுங்கானாவில் அரங்கேறியுள்ளது.

சிக்னல் தாண்டா கிராமத்தை சேர்ந்த குறித்த பெண், ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் தனது கணவரை இழந்துள்ள நிலையில், அப்பகுதியில் உள்ள சிலருடன் தவறான தொடர்பில் இருந்து வந்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், இது குறித்து அறித்த அவரது கணவரின் சகோதரரான ராஜூவும், அவரை தனது ஆசைக்கு இணங்கும்படி வற்புறுத்தி வந்துள்ளார் . இதனால் ஆத்திரமடைந்த அப்பெண், கடந்த சில நாள்களுக்கு முன்னர், ராஜூவை ஆற்றங்கரைக்கு வரவழைத்து, தனது ஆண் நண்பர்கள் இருவருடன் இணைந்து ராஜூவை அடித்துக் கொலை செய்துள்ளார்.

இந்நிலையில், ராஜூவை அவர் கொலைசெய்ததாக ஒப்புக்கொண்டதால், ஊர் மக்கள் அவருக்கு செருப்பு மாலை அணிவித்து, ஊர்வலமாக அழைத்து சென்றனர் எனத் தெரிவிக்கப்டுகின்றது.




இன்று ஆரம்பிக்கிறது இரண்டாவது டெஸ்ட்:

# இந்தியாவுக்கு சவாலளிக்குமா அவுஸ்திரேலியா?

இந்திய, அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது டெல்லியில் இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

நான்கு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இலகுவாக இந்தியா வென்ற நிலையில், இந்தியாவுக்கு சவாலளிக்க வேண்டுமாயின் துடுப்பாட்டம், பந்துவீச்சில் பலத்த முன்னேற்றத்தை அவுஸ்திரேலியா காண்பிக்க வேண்டியுள்ளது.

இந்திய அணியைப் பொறுத்தவரையில் சூரியகுமார் யாதவ்வை ஷ்ரேயாஸ் ஐயர் பிரதியிடுவதோடு, லோகேஷ் ராகுலுக்கான இறுதி வாய்ப்பாக இப்போட்டி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில் போர்முடனுள்ள ஷுப்மன் கில் அணிக்கு வெளியே காணப்படுகிறார்.

மறுபக்கமாக அவுஸ்திரேலியாவைப் பொறுத்த வரையில் மிற்செல் ஸ்டார்க், கமரொன் கிறீன் ஆகியோர் பூரண உடற்றகுதியை அடையாத அணியில் அதேயணியே களமிறங்கும் வாய்ப்புகள் காணப்படுகின்றன. மற் றென்ஷோவை ட்ரெவிஸ் ஹெட் பிரதியிடுவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.





இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## ஆர்சனலை வென்ற மன்செஸ்டர் சிற்றி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், ஆர்சனலின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணி உடனான போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி வென்றது.

சிற்றி சார்பாக, கெவின் டி ப்ரூனே, ஜக் கிறெலிஷ், எர்லிங் பிறோட் ஹலான்ட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். ஆர்சனல் சார்பாகப் பெறப்பட்ட கோலை புகாயோ ஸாகா பெற்றார்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் சிற்றியும், ஆர்சனலும் தலா 51 புள்ளிகளைப் பெற்றுள்ளபோதும் கோலெண்ணிக்கை வித்தியாசத்தில் முதலாவது, இரண்டாவது இடத்தில் முறையே காணப்படுகின்றன. 46 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் யுனைட்டெட்டும், 41 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் நியூகாசில் யுனைட்டெட்டும் காணப்படுகின்றன. இதில், ஆர்சனலும், நியூகாசில் யுனைட்டெட்டும் ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளன.

சம்பியன்ஸ் லீக்:

## செல்சியை வீழ்த்திய டொட்டமுண்ட்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சியுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பொரூசியா டொட்டமுண்ட் வென்றது.

டொட்டமுண்ட் சார்பாகப் பெறப்பட்ட கோலை கரிம் அடெயெமி பெற்றிருந்தார்.




## செல்சி செல்லும் நெய்மர்?

பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் முன்களவீரரான நெய்மரை இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சி கைச்சாத்திடுவது குறித்து பிரான்ஸ் தலைநகர் பரிஸில் பரிஸ் ஸா ஜெர்மைனின் தலைவர் நஸார் அல் கெலாபியும், செல்சியின் இணை உரிமையாளர் டொட் பொஹ்லியும் கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்ததாகக் கூறப்படுகிறது.

பரிஸ் ஸா ஜெர்மைனுடன் எதிர்வரும் 2027ஆம் ஆண்டு வரையில் 31 வயதான நெய்மர் ஒப்பந்தத்தைக் கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கிந்தியத் தீவுகளின்

## அணித் தலைவர்களாக ஹோப், பவல்

மேற்கிந்தியத் தீவுகளின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான அணித்தலைவராக ஷே ஹோப்பும், இருபதுக்கு  20 சர்வதேசப் போட்டிகளுக்கான அணித்தலைவராக றொவ்மன் பவலும் பெயரிடப்பட்டுள்ளனர்.



தனது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான அணித்தலைமைப் பொறுப்பிலிருந்து இராஜினாமா செய்த நிக்கலஸ் பூரானையே ஹோப்பும், பவலும் பிரதியிட்டுள்ளனர்.

லிபியா

# அகதிகள் படகு விபத்து: 73 பேர் உயிரிழப்பு



வட ஆபிரிக்காவில் இருந்து ஐரோப்பா நோக்கி அகதிகளை ஏற்றிச் சென்ற படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 73 பேர் உயிரிழந்தனர்.

உள்நாட்டு போரால் நிலைகுலைந்துள்ள சிரியா, ஆப்கானிஸ்தான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து ஏராளமான அகதிகள் அடைக்கலம் தேடி ஐரோப்பிய நாடுகளுக்கு ஆபத்தான கடல் பயணம் மேற்கொள்கின்றனர்.

அந்தவகையில், அண்மையில் கஸ்ர் அல்காயரிலிருந்து 80 பேருடன் சென்ற படகொன்று லிபிய கடற்கரையில் கவிழ்ந்தது விபத்துக்குள்ளானது.

இதில், 73 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்ததாக கூறப்படும் நிலையில், இதுவரை 11 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் நீரில் தத்தளித்து உயிருக்கு போராடிக் கொண்டிருந்த 7 பேர் மீட்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தாய்லாந்து

தாய்லாந்து குகை சம்பவம்;

## 4 வருடங்களுக்குப் பின்னர் உயிரிழந்த இளைஞன்

தாய்லாந்தில் 2018 ஆம் குகையொன்றுக்குள் சிக்கி உலகளவில் கவனத்தை ஈர்த்த 12 சிறுவர்களில் ஒருவனான 'டுவாங்பெட்' அண்மையில் உடல் நலக் குறைவால் உயிரிழந்துள்ளார்.

சியாங்ராய் மாகாணத்தில் உள்ள தாம் லுவாங் என்ற குகைக்குள், நண்பனின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக தமது காற்பந்து பயிற்சியாளருடன் சென்ற குறித்த சிறுவர்கள் திடீரென ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் குகையை விட்டு வெளியே வரமுடியால் சிக்கித் தவித்தனர்.

இச்சம்பவமானது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், சுமார் 18 நாட்கள் போராட்டத்திற்கு பின்னர் அவர்கள் மீட்புப் படையினால் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

இந்நிலையில் குறித்த காற்பந்து அணியின் தலைவராக இருந்த டுவாங்பெட் என்ற இளைஞன், பிரித்தானியாவில் உள்ள, புரூக் ஹவுஸ் கல்லூரியில் கல்வி கற்று வந்த நிலையில், தலையில் ஏற்பட்ட காயம் காரணமாக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் கடந்த 12 ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் .

அமெரிக்கா

## நாயை டுவிட்டரின் புதிய சி.இ.ஓவாக அறிவித்த எலோன்



உலகின் மிகப்பெரும் செல்வந்தரும், டெஸ்லா ,ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகருமான எலோன் மஸ்க் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் டுவிட்டரைக் கைப்பற்றினார்.

இதனையடுத்து டுவிட்டரில் பல்வேறு மாற்றங்களைச் செய்து வரும் அவர் அண்மையில் டுவிட்டர் நிறுவனத்தின் C.E.O பொறுப்பு வகித்த இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பராக் அகர்வால் உள்ளிட்ட முக்கிய பதவிகளில் கடமையாற்றிவந்த ஊழியர்கள் பலரை பணி நீக்கம் செய்தார்.

அதுமட்டுமல்லாது டுவிட்டரில் 'ப்ளூ டிக் கட்டண உயர்வு, ஆட்கள் குறைப்பு, வருவாய் இரட்டிப்பு திட்டம் ' உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறார்.


இதன்காரணமாக பெரும்பாலான மக்களின் வெறுப்பை அவர் சம்பாதித்து வருகின்றார்.

இந்நிலையில் அண்மையில் டுவிட்டர் நிறுவனத்தின் தலைமை செயற்பாட்டு அதிகாரியின் (C.E.O ) கதிரையில், தான் வளர்த்துவரும் நாய் அமர்ந்து இருப்பது போன்ற புகைப்படத்தை பகிர்ந்த எலோன் "Floki தான் டுவிட்டர் நிறுவனத்தின் சி.இ.ஓ என நகைச்சுவையாகப் பதிவிட்டிருந்தார்.

இது "முன்னாள் C.E.Oவை விட நாயின் செயற்பாடு சிறப்பாக உள்ளது" என அவர் தெரிவிப்பது போல் உள்ளதாக, விமர்சனம் எழுந்துள்ளது.

ஜப்பான்

## 30 ஆண்டுகளாகப் பெண்கள் குளிப்பதை படமெடுத்த கும்பல்



ஜப்பானின் பிரசித்திப் பெற்ற நீராவிக் குளியல் தொட்டிகளில் பெண்கள் குளிப்பதை 17 பேர் கொண்ட கும்பல் கடந்த 30 ஆண்டுகளாக இரகசியமாகப் படமெடுத்து வந்துள்ளது. இந்நிலையில் இச்சம்பவத்துடன் தொடர்புடைய 17 பேரைப் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட நீராவிக் குளியல் தொட்டிகளில் இரகசிய கமெராக்கள் மூலம் பெண்கள் படமாக்கப்பட்டு உள்ளனர் எனவும், சுமார் 10,000 க்கும் மேற்பட்ட பெண்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கலாம் எனவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

பிலிப்பைன்ஸ்

## பிலிப்பைன்ஸில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

பிலிப்பைன்ஸின் நேற்று (16) 6.1 ரிச்சர் அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

மாஸ்பேட் தீவில் உள்ள மியாகா என்ற இடத்தில் 11 கிலோ மீற்றர் ஆழத்தில் உள்ளூர் நேரப்படி அதிகாலை இரண்டு மணிக்கு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தால் கட்டடங்கள் குலுங்கின. பல இடங்களில் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி, வீதிகளில் தஞ்சம் அடைந்தனர். இந்நிலநடுக்கத்தால் சேதம் எதுவும் ஏற்பட்டதாக தற்போது வரை எந்தத் தகவலும் இல்லை.

துருக்கி - சிரிய எல்லையில் கடந்த வாரம் ஏற்பட்ட மூன்று சக்திவாய்ந்த நிலநடுக்கங்களால் இதுவரை 41,000 பேர் உயிரிழந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



பிலிப்பைன்ஸ்

## ஒரு கிலோ கிராம் வெங்காயம் 13,000 ரூபாய்



பிலிப்பைன்ஸில் கடந்த சில மாதங்களாக காய்கறிகளுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

குறிப்பாக வெங்காயத்தின் விலை உச்சத்தைத் தொட்டுள்ளது. அந்தவகையில் ஒரு கிலோ கிராம் வெங்காயத்தின் விலை இலங்கை மதிப்பில் 13,000 ரூபாய் வரை விற்கப்படுவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் வெள்ளிக்கிழமை, 17 பெப்ரவரி 2023, இல. 8, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.